Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 1 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 11 (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 48

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2222588
மின்அஞ்சல் - thangan 672002 @yahoo .com
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better Place
for your Children
(சி-186)

# உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்ற படைத்தரப்பினர் தொடர்ந்து மறுப்பு!

## நிலைமையை ஆராய கால அவகாசம்; அரச தரப்பு புலிகளிடம் கோரிக்கை !

(முகமாலையிலிருந்து கணேஷ், லிவிங்ஸ்ரன்)

**முகமாலையில் நேற்று அரச தரப்பும் விடுதலைப்புலிகளும் பங்கேற்ற யாழ். பிராந்தியப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் - உயர் பாதுகாப்பு வலயம், புதியகாப்பு நிலைகள், தடைசெய்யப்பட்ட வீதிகள், சுதந்திரமான கடற்தொழில் எனப் பல பிரதான விடயங்கள் ஆராயப்பட்டதாயினும் - இவற்றில் படைத்தரப்பு தளர்வுகளைச் செய்யப் பின்னடித்ததால், முக்கிய முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் சந்திப்பு முடிவடைந்தது. எனினும் - தொடர்ந்து இவ்விடயங்கள் ஆராயப்படும் என இரண்டு தரப்பினரும் தெரிவித்தனர்.**

நேற்றுக்காலை 10 மணியளவில் முகமாலை சூனியப்பிரதேசத்தில் பாதுகாப்பு உபகுழுவின் யாழ்.பிராந்தியக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் - வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன், கடற்புலிகளின் துணைத் தளபதி லெப். கேணல் செழியன், கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் இனியவன், லெப்.கேணல் அறிவு, மற்றும் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி , அரசியற்துறையைச் சேர்ந்த புலித்தேவன், ஆகியோரும் அரச தரப்பில் பாதுகாப்பு அமைச்சின்

(10ஆம் பக்கம் பார்க்க)





சந்திப்புக்குவரும் புலிகள் தரப்பினரை முதலாவது படத்திலும், கேணல் தீபனை கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் புருண்டம் வரவேற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



## தீர்மானங்கள் எடுக்கப்படாத பேச்சு திருப்திகரமாக இல்லை

### பேச்சின் முடிவில் கேணல் தீபன்

(முகமாலை)

'யாழ். குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது சம்பந்தமாக எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. இதே ...ல் கடற்தொழில் செய்வதற்கு மேலதிகமாக எந்த இடங்களும் அனுமதிக்கப்படவில்லை. மக்களின் மீள்குடியமர்வு சம்பந்தமாக எந்த தீர்மானங்களுக்கும் வரவில்லை. மொத்தத்தில் இன்றையை பேச்சு வார்த்தை திருப்திகரமாக அமையவில்லை. இவ்வாறு விடுதலைப் புலிகளின் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகர் பாதுகாப்பு வலயம் நீக்குமாறு புலிகள் கோரிக்கை

(முகமாலை)

யாழ். நகரின் மத்தியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தையும், இராணுவ நிலைகளையும் அகற்றி போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருக்கும் வீதிகளைத் திறந்து யாழ்.நகரில் இயல்புச் சூழலை ஏற்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு நேற்றைய முகமாலை பேச்சுவார்த்தையின் போது அரச தரப்பிடம் விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றைய சந்திப்பின்போது பொதுமக்களின் இயல்பு வாழ்க்

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இவயள் அரக்கினாத்தான் சமாதானமும் சுலபமா அரக்கும்..

## ஒஸ்ரினும் புலித்தேவனும் திடீரெனப் புறப்பட்டது ஏன்?



(முகமாலை)

நேற்றைய பேச்சுக்களின்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டொவும் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவனும் திடீரெனப் புறப்பட்டு வெளியில் சென்றனர். இவர்கள் வாகனத்தில் புறப்பட்டுச் சென்றது பலரையும் வியப்பிற்குள்ளாக்கியது.

கேணல் கருணாவின் மட்டக்களப்பு பயணம் தொடர்பாக எழுந்த சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவனும் தனிவாகனத்தில் இவ்வாறு புறப்பட்டுச் சென்றார்களெனப் பின்னர் தெரியவந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் மீண்டும் ஈ.பி.டி.பியினர்; வெளியேறுமாறு மக்கள் சுற்றிவளைப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மீண்டும் முகாம் அமைக்கும் நோக்கில் நேற்று அதிகாலை ஈ.பி.டி.பியினர் பொலிஸாருடன் அங்கு போய் இறங்கியுள்ளனர். இவர்களை வெளியேறுமாறு கோரி பொதுமக்கள் அவர்களது அலுவலகப்பகுதியைச் சுற்றி வளைத்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3.00 மணியளவில் சுமார் 40 ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், 20 பொலீசாருடன் படகுகளில் நெடுந்தீவில் வந்திறங்கினர். இவர்கள் முன்னர் பொதுமக்களால் எரித்தழிக்கப்பட்ட தமது முகாமுக்கு தாம் எடுத்து வந்த ஏழு மோட்டார் சைக்கிள்களுடன், பொதுமக்கள் விழித்தெழுவதற்கு முன்பாகவே போய்ச் சேர்ந்து விட்டனர். மீண்டும் முகாமை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். காலையில சம்பவத்தையறிந்து அங்கு கூடிய நெடுந்தீவு மக்கள் ஈ.பி.டி.பியினரை தடுத்து நெடுந்தீவைவிட்டு வெளியேறுமாறு கோஷமிட்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் நீர் எடுக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB
விமான சேவை
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 517019
(சி-148)

### கொழும்புத்துறையில்

# மீளவும் வீடுகளை ஆக்கிரமிக்கும் படையினருக்கு எதிராக போராட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீளவும் வீடுகளை ஆக்கிரமிப்பதைக் கண்டித்து - வெகுஜனப் போராட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு கொழும்புத்துறைப் பொது அமைப்புக்கள் தயாராகி வருகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி எந்தவொரு பாடசாலையிலிருந்தும் 500 மீற்றர் தூரம் விலகியே இராணுவத்தினர் இருக்க வேண்டும். ஆனால் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தை விடக் குறைவான தூரத்தில் இராணுவ முகாம் அமைந்திருப்பதோடு, சுவாமியார் வீதியிலும் பாரிய இராணுவமுகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றைக் கண்டித்தே மேற்படி போராட்டம் நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (60)

## ஜே.வி.பி. அலுவலக தாக்குதல்கள்; எனது பாதுகாப்பு பிரிவு தொடர்பில்லை

### பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனதா விமுக்தி பெரமுனவின் அலுவலகங்கள் சமீபத்தில் தாக்கப்பட்டன. இந்தத் தாக்குதலுக்கும் தனது பாதுகாப்புப் பிரிவினருக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதல் பற்றி என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றி யோசனை கூறுமாறு அவர் எதிர்ககட்சியினரைக் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக, ஜனதா விமுக்தி பெரமுனவின் கட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்டதற்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் பாதுகாப்புப் பிரிவுதான் பொறுப்பு. இது பற்றி விசாரணை செய்யுமாறு ஜனாதிபதியை ஜே.வி.பி. கேட்டுக் கொள்ளுமென்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதரவான சான்றுகளைச் சமர்ப்பிக குமாறு விமல் வீரவன்சவை பிரதமர் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

## பரிசளிப்பு விழா

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ம.கணபதிப் பிள்ளை தலைமையில நடைபெறும.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

## ஒலிப்பதிவு நாடா அறிமுக விழா பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இன்று நடைபெறவிருந்த இசைப் பிரியனின் "கல்லறை தழுவும் கானங்கள்" ஒலிப்பதிவு நாடா அறிமுக விழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.

**பிரபல தொழிலதிபரும், சமூக சேவையாளருமாகிய திரு/திருமதி.பாஸ்கரன் தம்பதியினர் கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் ஊடாக சுழற்சி முறை இலகு கடன் அடிப்படையிலான தையல் இயந்திரங்கள் வழங்குதல்.**

**17.11.2002**

வாட்டமுறும் மக்களது வாழ்வை வளமாக்கும்
நாட்டம் கொண்ட பெருந்தகை பாஸ்கரன் அவர்கள்-தான்
காட்டிடும் நல் அன்பு, தயை, நல்லொழுக்கமென்பவற்றால்
ஈட்டிய செல்வமதில் இயல்பற்றோருக்கு ஈவதற்கே
தேட்டமதைத் தேக்கியதிற் செய்திடும் நற்பணிகளினால் அவரின்
வீட்டிற்கும், அவர்கள் பிறந்த ஊரிற்கும் அல்லாது
நாட்டிற்கும் அன்றோ நல்லதோர் பெருமை தரும்
கேட்டிடுவோர் செவிகளிலே தேனமுது ஊறி நிற்கும்
வீட்டிலுள்ள பெண்களவர் வீண்பொழுது கழியாது-வரவு
ஈட்டிடும் நற்தையற் தொழிலினிலே ஈடுபாடு
காட்டியவர் வாழ்வினிலேவளம் பெறுவர் என்பதனால - இலகு
கட்டுப்பண முறைமையினால் தையல் இயந்திரங்கள் வழங்குகிறார்.
போட்டி மனப்பான்மை இன்றி பொல்லாப்பு எதுவுமின்றி
ஈட்டிடும் இந் நற்பணியை இடர்களின்றிச் செய்வதற்கு
காட்டியிடும் கட்டுப்பாடு, கண்ணியம் நிறைந்த எங்கள்
கூட்டுறவுச் சங்கமதைத் தேர்ந்தெடுத்தார் தெளிவுடனே
கூட்டுறவுச் சங்கமதும் கூடிய நற்பொறுப்புடனே
தேடுதலைக் கைக்கொண்டு சிரத்தையுடன் தெரிவு செய்து
கூட்டியிங்கு அவர்களுடன் குலவித் திருப்தியுற்று-நன்மை
ஈட்டிடும் இந் நற்பணியை இன்றைய நாள் முடிக்கிறது.
ஆக்கமுள்ள நோக்கமிதன் ஆற்றல் மிகப் பெரிது
வாக்கினாலே வாழ்த்த வார்த்தைகள் மிகக் குறைவு-அவர்கள்
நோக்கமது மென்மேலும் ஏற்றமுடன் உயர்வு பெற்று
போக்க வேண்டும் மக்கள் இடர் என்று நாம் வாழ்த்துகிறோம்.
வாழிய அவர் தம் வளமான நோக்கங்கள்
வாழிய கூட்டுறவுன் துடிப்புமிக்க சேவைகள்
வாழிய பயனாளிகள் வளங்கள பல பெற்று.

அங்கத்தவர்கள்,
கட்டைவேலி - நெல்லியடி,
ப.நோ.கூ.சங்கம்.

சி-189

**உங்கள் எதிர்காலம் அமைதி உடையதாக உள்ளதா என அறியவும் மற்றும் திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கும் உள்ரூர், வெளியூர் சாதகக் குறிப்புகள் எழுதிக்கொள்ளவும் தொடர்பு கொள்ளுங்கள்**

**சிவா சோதிடர்**

111, கோவில் வீதி,
நல்லூர்.

(சி-175)

T.V, டெக், CD, VCD என்பவற்றை துரித கதியில் திருத்தம் செய்து கொள்ளவும், உதிரிப்பாகங்களை நியாயவிலையில் பெற்றுக் கொளளவும் நாடுங்கள்.

**A.K .ELECTRONIC**

245, இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம். (சி-169)

**கடை விற்பனைக்கு**

முனீஸ்வரன் வீதியில் கடையுடன் கூடிய நான்கு மாடிக் கட்டடம் (திருத்த வேலைகள் செய்யவேண்டிய நிலையில்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மா.இராசேஸ்வரன்
வேல்முருகன் றேடர்ஸ்,
56 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (031)

**ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்**
இன்றைய ஸ்பெஷல்
குங்குமப்பூ சிக்கன் புரியாணி
ரூபா 125
**ஜெசித்தாரா**
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டிக்குளி.
(சி-163)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
கமல், சிம்ரன் நடித்த
**பஞ்ச தந்திரம்**
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
**UNIVERSAL SOLDIER**
(சி-139)

**ராஜா**
யாழ்ப்பாணம்.



தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)


## இன்றைய நாள் இனிய நாள்

திதி :- திரயோதசி - பின்னிரவு - 3.55 வரை.
நட்சத்திரம:- ரேவதி - பிற்பகல - 1.08 வரை அதன் மேல அச்சுவினி
ராகு காலம் :- பிற்பகல் - 4.38 - 6.08 வரை.
சுபநேரம் :- முற்பகல் - 9.08 - 10.38 வரை - கரிநாள்.

**17.11.2002 - ஞாயிற்றுக்கிழமை**

**மேடம்** :- தேகசுகம் சமம், மனஅமைதி, வரவுக்கேற்ற செலவு, தெய்வபக்தி, கல்வி முன்னேற்றம் சமம்.

**இடபம்** :- தேகசுகம், மனத்தில் கர்வநிலை அதனால் தேவையற்ற செலவு, வீண்வாக்குவாதம், கல்வி நிலை சமம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, விருந்தினர் உறவு, கலைநிகழ்ச்சியில் ரசனை, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, தெய்வபக்தி, நண்பர்கள், உறவினர் மகிழ்ச்சி, கல்வி நிலை முன்னேற்றம்.

**சிங்கம்** :- தேகசுகம் சமம், மனஅமைதி, வரவுக்கேற்ற செலவு, மௌனநிலை சிறப்புத்தரும், கல்வி நிலை சமம்.

**கன்னி** :- தேகசுகம் சமம், மனஅமைதி, வரவுக்கேற்ற செலவு, மௌனநிலை, கல்வியில் ஊக்கம் வேண்டும்,

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, எதிரி தலை குனிவு, புதிய கடன் வசதி, விருந்தினர் வருகை, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, பணவரவு, புத்திரர் சுகம், கடன் வசூல், உள்ளூர் பிரயாணம், கல்வி நிலை சமம்.

**தனு** :- தேகசுகம் சமம், மனநிலை அமைதி, வரவுக்கேற்ற செலவு, மாதாவுக்கு சிறிது சுகக் குறைவு, புத்திரர் சுகம், கல்வி நிலையில் முன்னேற்றம்.

**மகரம்** :- தேகசுகம் சமம், மனநிலை அமைதி, வரவுக்கேற்ற செலவு,மாதாவுக்கு சுகக் குறைவு, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**கும்பம்** :- தேகசுகம் சமம், மனநிலை அமைதி, வரவு செலவு சமம், விருந்தினர் உறவு, உள்ளூர் சுற்றுலா, கல்வி முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகம் சமம், மனநிலை சமம், அறுசுவையுண்டி, புதிய ஆடை அணிவதில் மகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு, கவலை, கல்வி முன்னேற்றம்.


RECODING SHATHEES STUDIO

**யாழ்.நகரில் மீண்டும்.....**

# சதீஸ் ஒலிப்பதிவு கலையகம்

**இல.25 பஸ் நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது**

- நீங்கள் விரும்பிய பழைய புதிய பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்
- கொம்பியூட்டர் மூலம் C.D யில் பாடல்களை பதிவு செய்யவும்
- எலக்ரோனிப் பொருட்களை திருத்திக் கொள்ளவும் எலக்ரோனிப் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும்
- குறைந்த விலையில் டிஸ் அன்ரனாவை பொருத்தி 10 இற்கு மேற்பட்ட தமிழ் நிகழ்ச்சிகளை உங்கள் வீட்டிலிருந்தே கண்டு களிக்கவும்.



CD பதிவிற்கு 50/-

நாட வேண்டிய இடம்:- இல.25 பஸ்நிலையம் யாழ்ப்பாணம்

(சி-188)

# குடாநாட்டின் நுழைவாயிலாக பூநகரி வாடியடிச் சந்தி மாறும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி வாடியடிச்சந்திப் பகுதி மிக விரைவில் உல்லாசப் பயணிகள் மையமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க மேற்படி பகுதியின் புராதன அம்சங்கள் சிதைவுறாத வகையிலும், உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய வகையிலும் இப்பகுதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மேற்படி அபிவிருத்திக்கான புதிய செயற்திட்டம் ஒன்றை கிளிநொச்சி அரச செயலகம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இச்செயற்திட்டத்தின்படி மேற்படி அபிவிருத்திக்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இச்செயற்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இத்திட்டத்தின்படி இப்பகுதிகளின் வீதிகள் மிகநவீன முறையில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. அத்துடன் இப்பகுதியில் காணப்படும் டச்சுக்கோட்டையைச் சூழவுள்ள பகுதிகள் மற்றும் வாடியடிச் சந்திப்பகுதி ஆகியவை தற்போது துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி அபிவிருத்திக்கான செயற திட்டம் நிறைவடையும்போது பூநகரி வாடியடிப் பகுதி மிகவும் கவர்சசிகரமான உல்லாசப் பயணிகள் மையமாக மாறும். அத்துடன் யாழ்ப்பாணத்துக்கான தரைப்போக்குவரத்தையும் மிக இலகுவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி யாழ். நகர்பகுதிக்கான பயணம் தற்போதைய நேரத்தை விட அரை மணி நேரம் குறைவாக எடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (02)

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27



எமக்கு ஒரு நாடு வேண்டும். எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும். என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகின்றார்கள். எனவே, எமது மாவீரர்கள் ஒவ்வொரு வரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீரசுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது.

வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்.

## சுன்னாகத்தில் உடைந்த நிலையில் கழிவு நீர் வாய்க்கால்

சுன்னாகம் பஸ் நிலையத்தின் வடக்குப் பக்கமாக உள்ள கழிவு நீர் வாய்க்கால் உடைந்ததனால் அவ் இடத்தில் பாரிய குழி ஏற்பட்டுள்ளது.

இதனால் பஸ் நிலையத்திற்குள் பஸ்கள் சென்றுவர பெரும் இடைஞ்சலாக உள்ளதாக பஸ் சாரதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# கொழும்பு – தூத்துக்குடி கப்பல் 24 ஆம் திகதி முதல் சேவை



(சென்னை)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவை தொடர்பான உத்தியோகபூர்வ ஒப்பந்தம் - வரும் 23 ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளதாகவும், இதையடுத்து அடுத்த நாள் முதல் கப்பல் சேவை நடைபெறும் என்றும் தெரியவருகின்றது.

தூத்துக்குடியில் - கப்பல் பயணிகள் இறங்குவதற்கேற்ற வகையில் துறைமுகம் தயார் படுத்தப்பட்டுள்ளதாகவும்- காத்திருப்பு அறை, சிற்றுண்டிச்சாலை, சுங்கப்பகுதி, குடிவரவு - குடியகல்வுப் பகுதி, வெளிநாட்டு நாணய மாற்றுப்பகுதி என்பன அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - கப்பல் சேவை ஆரம்பிக்க முன்னர் - இவ்வேலைகள் பூர்த்தியடையாத பட்சத்தில், தற்காலிக ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என - தூத்துக்குடி துறைமுகச் சபையின் தலைவர் என்.கே.ரகுபதி அறிவித்துள்ளார்.

ஒரு வாரத்தில் நடத்தப்படவுள்ள கப்பல் சேவைகளின் எண்ணிக்கை, கப்பல போக்குவரத்துக்கான அனுமதிச் சிட்டைகள் பெறுமிடங்கள் போன்றன இவ்வார இறுதிக்குள் அறிவிக்கப்படுமென்றும்,

தூத்துக்குடியை மாலையளவில் வந்தடையும் கப்பல் - அடுத்த நாள் காலை அங்கிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படுவதாக நேர அட்டவணை அமையுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கான நிதி ஒதுக்கீடு குறைகக்கபட்டிருப்பதாக - முன்னாள் அமைசசரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான நிமால் சிறிபால டீ சில்வா அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசும் போது-

குறிப்பாக, ஜனாதிபதியின் திட்டமிடல் அமைச்சுக்கான நிதி பெருமளவில் குறைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்த அவர் -

ஜனாதிபதி நிதியத்தின் மூலமாக, சந்திரிகா குமாரதுங்க மக்களுக்கான சேவையைச் செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வேளை-குறுக்கிட்ட சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, தானும ஜனாதிபதி நிதியத்தில் ஒரு அங்கத்தவர் என்றும், தனக்குத் தெரியாமல் ஜனாதிபதி எவ்வாறு இப்படியெல்லாம் செலவழிக்க முடிந்தது என்றும் நிமால் சிறிபால டீ சில்வாவிடம் கேள்வியெழுப்பினார் -

இவ்வாறு தனிப்பட்ட ரீதியாகச் செலவு செய்வது பொது நிதியமொன்றுக்கு அழகல்ல என்றும் அவர் கூறினார்.

அவ்வேளை- நாடாளுமன்றத்திலிருந்த ஐ.தே.க உறுப்பினர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

## பெண்களுக்கு எதிரான வன்முறை வார நிகழ்வுகள்

மட்டக்களப்பு உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம், சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை வாரத்தையொட்டி, இம்மாதம் 29ஆம் திகதி மட்டக்களப்பு தாண்டவன் வெளிச்சந்தியில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறையினைக் குறைப்பதற்கு சகல தரப்பினருக்கும் விழிப்புணர்வு தேவை-என்பதை உணர்த்தும் வகையிலான கருப் பொருட்களைக் கொண்ட துண்டுப்பிரசுர விநியோகம், சுவரொட்டிகள் ஒட்டுதல், பதாதை-சுலோக அட்டை கள் தாங்கி நிற்றல் என்பனவும் இடம் பெறவுள்ளன.

## சித்திவிநாயகர் கும்பாபிஷேகம்

யாழ். கந்தர்மடம் பழம் வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் 07.02.2003 வெள்ளிக்கிழமை நயினாதீவு ஸ்ரீ நாபூஷணி அம்பாள் ஆலய பிரதம குரு பிரதிஷ்ட கிரியா கலாமணி சிவஸ்ரீ வை.பரமசாமி குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் பூர்த்தி விழா வன்று, சங்காபிஷேகமும், கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

## சாயி நிலையத்தில் போயா தின நிகழ்வுகள்

(வண்ணை)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் போயா தின நிகழ்வுகள் 19 ஆம் திகதி காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளன.

காலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெற்று கொடியேற்றம், அஷ்டோத்திரம், பஜனை, கலை நிகழ்வு, சிறப்புச் சொற்பொழிவு என்பனவும் நடைபெறவுள்ளன. (111)

## வசாவிளான் மகாவித்தியாலயத்தில் குழாய்க் கிணறுகள்

(ஊரெழு)

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதால் மாணவர்களின் குடிநீர் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. (96)

## சாவகச்சேரி இந்துவில் செயல் முறைப்பரீட்சை

(மீசாலை)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியினூடாக க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 20, 21, 22ஆம் திகதிகளில் முறையே சங்கீதம், நடனம், விவசாயம், மனையியல் ஆகிய பாடங்களிற்கு நடைபெறவுள்ளன.

எனவே இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல மாணவர்களையும் அன்றைய தினம் சமுகமளிக்கும் படி அதிபர் எஸ்.கைலாயநாதன் அறிவித்துள்ளார். (25)

# கிழக்கு முஸ்லிம் பகுதியில் பொலிஸ் நிலையங்கள் !

## பிரதமர் மு.காங்கிரசுக்கு உறுதிமொழி

(கொழும்பு நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பல பொலிஸ்நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான உறுதிமொழியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தன்னைச் சந்தித்த முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவுக்கு வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று பிரதமரைச் சந்தித்தது. இச்சந்திப்பின் போது பல முக்கிய விவகாரங்கள் குறித்து உரையாடப்பட்டிருக்கிறது.

கிழக்குப் பகுதியில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்தே பிரதமர் மேற படி உறுதிமொழியை வழங்கினார்.

## 'ரெலிகொம்' பங்குகள் அடுத்த மாதம் விற்பனை

இலங்கை ரெலிகொம் நிறுவனம இந்த மாதம் 28ம் திகதி அதன் பங்குகளை உத்தியோகபூர்வமாக விற்பனைக்கு விட இருக்கின்றது.

15 ரூபா பெறுமதியான 21 கோடி 65 லட்சம் பங்குகளை அது விற்பனை செய்யும். இதுவே இலங்கையன் மிகப்பெரிய பங்கு விற்பனையாக அமையும் என்று ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் சுமதிபால தெரிவித்தார்.

ரெலிகொம் நிறுவனத்தில் அரசாங்கம் தற்போது 61.5 சதவீத பங்குகளை வைத்திருக்கின்றது.

## மக்கள் வங்கி அடகு நகைகள் மீட்கக் கோரிக்கை

(சுன்னாகம்)

மக்கள் வங்கி கிளைகளில் 87ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் தங்க நகைகளை அடகு வைத்தவர்களை இம்மாதம் 30ஆம திகதிக்கு முன்னர் மீட்டுக்கொள்ளுமாறுமக்கள் வங்கி வட.வலய பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தங்க நகைகளின் பெறுமதி அதிகரித்திருப்பதனால் அதற்கு முன்னர் மீட்டுக்கொள்ளுதல் ஏற்றதாக இருபபதோடு மீட்கத்தவறும் தங்கநகைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(87)

## கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம்

(உரும்பிராய்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு - கொழும்பில் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (74)

# நாடாளுமன்றத்தில் திறக்கப்படவுள்ள நினைவுச் சின்னங்களை விற்கும் கடை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைப் பார்வையிட வருவோர் நினைவுச் சின்னங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நாடாளுமன்ற வளாகத்தில் கடை ஒன்று அமைக்கப்படவுள்ளது. கடையைத் திறப்பதற்கான அனுமதியைச் சபாநாயகர் ஜோசப் மைகசல் பெரேரா வழங்கியுள்ளார்.

தினமும் நாடாளுமன்றத்தை இரண்டாயிரம் பேர் வரையில் பார்வையிடச் செல்கின்றனர். இவர்கள் தாம் நாடாளுமன்றத்துக்குச் சென்றது தொடர்பான நினைவுச் சின்னங்களை வைத்துப் பாதுகாக்க விரும்புகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டே இத்தகைய நினைவுச் சின்னங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றைத் திறக்க நாடாளுமன்ற விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இக்கடையில் பாராளுமன்றத்தின் நினைவைப் பிரதிபலிக்கக்கூடிய கேடயங்கள், கோப்பைகள், நினைவு முத்திரைகள், ரீ சேட்டுகள் உட்பட பல நினைவுப் பொருட்கள் விற்கப்படவுள்ளன.

உலகிலுள்ள பல நாடாளுமன்றங்களில் இத்தகைய நினைவுச் சின்னங்களை விற்கும் கடைகள் திறக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# எரிபொருட்களின் விலை அடுத்தமாதம் குறையும்!

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை அடுத்த மாதம் குறைக்கப்படும் என இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவர் தகம் விமலசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் மசகு எணணெயின் விலை குறைவடையும் சாத்தியங்கள் தென்படுவதால், அடுத்த மாதத்தில் எரிபொருட்களின் விலையைக் குறைக்கக் கூடியதாக இருக்கும் என்று அவர் மேலும தெரிவித்தார்.

# சாவகச்சேரி பிரதேச செயலகம் விரைவில் புனரமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச செயலக கட்டடம் மிகவிரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இராணுவ நடவடிக்கையால் பலத்த சேதத்துக்குள்ளாகிய மேற்படி பிரதேச செயலக கட்டடம் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

இக்கட்டடத்தினை திருத்தி அமைபபதற்கு சுமார் பத்தொன்பது மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க,லி)

## றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.57 |
| சுபஹ் | 5.12 |
| உதயம் | 6.32 |
| லுஹர் | 12.27 |
| அஸர் | 3.49 |
| ம.்ரிப் | 6.20 |
| இஷா | 7.33 |

## 16 குளங்கள் புனரமைப்பு

இந்த வருட இறுதிக்குள் யாழ். மாவட்டத்திலுள்ள குளங்களுள் 16 குளங்கள் உலக உணவுத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச்செய்யப்படவுள்ளது.

இதன்படி வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் வட்டுக்கோட்டை உப்புவயல் குளமும் இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது. இந்தக் குளத்திற்கான புனரமைப்பு வேலைகள் யாவும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்குளத்தின் புனரமைப்பு வேலைகள் வட்டுக்கோட்டை விவசாய சம்மேளனத்தினால் மேற்கொள் எப்பட்டு வருகின்றது. (100)

# ஹெப்ரோனில் அதிரடி; 12 இஸ்ரேலியர் பலி!


தாக்குதல் நடந்த சம்பவப்பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர்

(ஹெப்ரோன்)

இஸ்ரேலின் மேற்குக் கரை நகரமான ஹெப்ரொனில் நடைபெற்ற அதிரடித் தாக்குதலில் 12 இஸ்ரேலிய பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 15 பேர் காயமடைந்துள்ளனர். பலஸ்தீனர்கள் எனச சந்தேகிக்கப்படும் ஆயுததாரிகள், துப்பாக்கிகள், கிரனேட்டுக்கள் சகிதம் வந்து யூதக் குடியேற்றம் ஒன்றின் பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் மீது இத்தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவம் இத்தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், நன்கு திட்டமிடப்பட்ட "இரட்டை அதிரடித் தாக்குதல்" என வர்ணித்துள்ளது. பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் அவர்களை மீட்க வரும் இஸ்ரேலிய இராணுவத்தினர் மீதும் ஆயுததாரிகள் பதுங்கியிருந்து அதிரடித் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

இத்தாக்குதல் நடந்த சில மணி நேரத்தின் பின்னர் இஸ்ரேலிய ஹெலிக்கெப்டர் ஒன்று, பலஸ்தீனர்கள் செறிந்து வாழும் காஸா நகர் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

## உலகவலம்

### ஆட்சியில் நீடிக்க முஷராவ் முயற்சி

அடுத்த ஐந்தாண்டுகளுக்கு பதவியில் இருப்பதற்கான முயற்சிகளில பாகிஸ்தான் ஆட்சியாளர் ஜெனரல் முஷராவ் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இதற்காக அரசியல் யாப்புச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் பாராளுமன்றத்தினைக கலைத்து விட்டு தேசிய பாதுகாப்புச் சபையினை உருவாக்குவதற்கு முடிவு செய்துள்ளார். இதற்கு எதிராக, பாகிஸ்தானிய எதிர்க்கட்சிகளும் சமயவாதப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்க போவதாக மிரட்டியுள்ளனர்.

இந்திய - பாகிஸ்தான் எல்லையில்

# ஊடுருவல்களைக் கண்காணிக்க நுண்ணுணர்வுச் சாதனங்கள்

- கொள்வனவு செய்ய இந்தியா முயற்சி -


எல்லையில் இந்தியப் படையினர்

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான எல்லைக் கோட்டுப் பிரதேசத்தில், பாகிஸ்தானிய பிரதேசத்திலிருந்தான ஊடுருவல்களைக் கண்காணிப்பதற்காக, இந்திய அரசாங்கம் தரை - நுண்ணுணர்வுச் சாதனங்களை அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு ஆலோசனை நடாத்தி வருகின்றது.

இத்தரை - நுண்ணுணர்வுச் சாதனங்கள் தரையில் நடைபெறும் மனித நடமாட்டங்களை உடனடியாக ரடாருக்கு தெரியப்படுத்தக் கூடிய வல்லமை பொருந்தியதாகும். இந்திய அரசாங்கம், எல்லைக்கோட்டுப் பிரதேசத்தில் இச்சாதனங்களைப் பொருத்தி அவற்றை ரடாருடன் இணைப்பதன் மூலம் எல்லைக் கோட்டுப் பிரதேசத்தினை மிகத்துல்லியமான முறையில் கண்காணிக்கக்கூடியதாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

1999 ஆம் ஆண்டு இவ்வாறான எல்லைக்கோட்டுப் பிரதேசத்தில அமைந்த கார்கில் பகுதியில் யுத்தம் மூண்டமை குறிப்பிடத்தக்கது. கார்கில் பிரதேசத்தில் இந்தியாவின் எல்லைக் கோட்டிற்குள் 14 கிலோமீற்றர் பிரதேசத்திற்கு, பாகிஸ்தானிய ஆதரவு காஷ்மீர் போராளிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியமையும் அத்தாக்குதலில் பாகிஸ்தானிய இராணுவம் நேரடியாகப் பங்கு கொண்டமையும் தெரிந்ததே.

# சீனக் கம்யூனிஸ்ட் தலைவருக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்து


ஜின்ரோ

சீனக் கம்யூனிச கட்சியின் புதிய தலைவர் ஹூ ஜின்ரோவிற்கும் ஏனைய மத்திய குழு உறுப்பினர்களுக்கும் உலகத்தலைவர்கள் பலர் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

ஜப்பான், ரஷ்யத் தலைவர்கள்- சீனாவின் புதிய தலைவரின் வருகையானது, தமது நாடுகளுடனான உறவுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை- வொஷிங்டன், தான் சீனாவின் புதிய தலைமுறை ஆட்சியாளர்களுடன் மனித உரிமைகள், சமயச் சுதந்திரம், பொருளாதாரத் தடைகள் என்பன தொடர்பாக மிக நெருக்கமாகத் தொழிற்படவுள்ளதாக தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் மே மாதம் அமெரிக்காவின் உப ஜனாதிபதி டிக்சென்னி, சீனாவிற்கு விஜயம் மேற்கொள்ளும்போது அமெரிக்க - சீன முறுகல் நிலைக்கு காரணமான, தாய்வான் அரசை தனது மாநிலமாக சீனா கருதுவது தொடர்பான விடயங்களை ஆராயவுள்ளதாக சீனாவின் புதிய தலைவர் ஹூ ஜின்ரோ தெரிவித்துள்ளார்.

அதேவேளை - புதிய சீனத் தலைவர் ஹூ ஜின்ரோ பயிற்றப்பட்ட பொறியியலாளர் என்றும், அவர் அபரிதமான ஞாபகசத்தியை கொண்டவர் என்பதுடன் சந்தைப் பொருளாதாரம் பற்றி அதிக ஆர்வமாக கற்று வருபவர் என்றும் அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

# பெலாரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐரோப்பிய ஒன்றியத்துள் நுழையத் தடை


லூக்காஸ்சேன்கோ

ஐரோப்பிய நாடாகிய பெலாரஸ் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீறிவருவதால் அந்நாட்டு ஜனாதிபதி அலெக்சாண்டர் லூக்காஸ்சேன்கோவினையும் அவரது 50 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், தனது 15 அங்கத்துவ நாடுகளுக்கும் பயணம் செய்வதை ஐரோப்பிய ஒன்றியம் தடுத்துள்ளது.

பெலாரஸ் நாட்டின் தலைவர்கள், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையில் பயணிப்பதற்குத் தடைவிதிப்பது தொடர்பாக, கடந்த செவ்வாய்க்கிழமை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கூடித் தீர்மானித்துள்ளனர்.

பெலாரஸ் பற்றி, வொஷிங்டன் கருத்து வெளியிடுகையில்- ஐரோப்பாவிலுள்ள கடைசி சர்வாதிகார நாடு என வர்ணித்ததோடு, பெலாரஸ் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து அந்நியப்படுவதற்கு அந்நாட்டு அரசாங்கம் -எதிர்க்கட்சியினர் மீதும், ஊடகத்துறையினர் மீதும் வன்முறைகளைப் பிரயோகித்து வருவதாகக் கண்டித்துள்ளது.

இதேவேளை- ஜனாதிபதி லூக்காஸ்சேன்கோ அடுத்த வாரம் பராகுவேயில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாட்டிற்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் 86 வீதமான காணிகள் சிங்களவர்களினுடையதாம்!

- பொ.ஜ .ஐ.முன்னணி. எம்.பி. குணவர்த்தன -

சிங்கள மக்களின் உரிமைகளைச் சிறுபான்மைச் சமுகத்துக்கு தாரைவார்த்தால் இரத்த ஆறு ஓடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று திருகோணமலை மாவட்ட பொ.ஜ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.டி.கே. குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இனப்பிரச்சனைக்குத் தீர்வு என்று சிங்கள இனத்தைப் புறக்கணிக்கக் கூடாது. கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

கிழக்கில் முஸ்லிம் மக்கள் மட்டும் வாழவில்லை. சிங்களவர்களும் வாழ்கிறார்கள். காணி உரிமைகளில் 86 வீதமானவை சிங்களவர்களுக்குரியதாகும்.

சிங்களவர்களைப் புறக்கணித்துச் செயற்பட்டால் கிழக்கில் சிங்களவர்களும் தனியான அலகு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிகையை முன்வைப்பார்கள் என்றார்.

### சுவிஸ் செல்ல ஏற்பாடு

கடந்த பதின்மூன்றாம் திகதி ரி.ரி.என். யாழ்ப்பாணத்தில் நடத்திய பாடும் சுரங்கள் போட்டியில் தெரிவான மா.இசையமுதன் தை மாதம் சுவிஸில் நடைபெறும் மிலேனியம் பாடகர் விருதுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்கான ஒழுங்குகளை ரி.ரி. என். நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பிரெஞ் தமிழ்த் தொலைக்காட்சி நிறுவனமான ரி.ரி.என். கடந்த சில நாட்களாக வீரசிங்கம் மண்டபத்தில் இப் போட்டியை நடத்தியமை தெரிந்ததே.

நெடுந்தீவில்

# மூக்குக் கண்ணாடிக்கு சிபார்சு செய்யப்பட்டோர்

கடந்த ஆவணிமாதம் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினரினால் நெடுந்தீவில் நடாத்தப்பட்ட நடமாடும் இலவச மருத்துவ சேவையின்போது கண்சிகிச்சை பிரிவினரினால் 60 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளுக்கு சிபார்சு செய்யப்பட்டது. அவர்களுக்கான மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் கண்ணாடிகளைப் பெறாதவர்களுக்கான 2 ஆம் கட்ட வழங்கல் வைபவம் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கண்ணாடி வழங்கப்பட வேண்டியோர் விபரம் :-

**1 ஆம் வட்டாரம்** - செல்லத்துரை பராசக்தி, மனோனமணி

**2ஆம் வட்டாரம்** -கே.கமலாம்பிகை, ரெட்ணமாலா

**3ஆம் வட்டாரம்** - ஏ.கிறிஸ்ரீனம்மா, பி.கமலாவதி

**4ஆம் வட்டாரம்** - இராசலிங்கம் பரமேஸ்வரி, ஜே.செபமாலை - மாது, பி.லூர்த்தம்மா, வடிவேல் அழகம்மா

**5ஆம் வட்டாரம்** - கணேசராணி, ஏ.விரிசிட்ரம்மா, ஏ.யசோ, கமலாதேவி

**6ஆம் வட்டாரம்** - மேரிமுத்து, புலேந்திரம் - அரியமலர், வெவன் தேவராஜ்

**7ஆம் வட்டாரம்**- கௌசல்யா தேவி

**12ஆம் வட்டாரம்** - யோசப் தோமஸ்

**13ஆம் வட்டாரம்** - ரி.பொன்னம்மா

**15ஆம் வட்டாரம்**- ரி.கண்மணி, அரியமலர், அருமைசித்திரம், கே.தர்மலிங்கம், கமலாதேவி, எலிசபெத், அமிர்தரஞ்சினி, பாலினிநடராசா, பால்சிங்கம், கோபி.

# சமுதாய முன்னேற்றத்திற்கு பாடுபடும் கட்டைவேலி - நெல்லியடி கூட்டுறவுச்சங்கம்

நாடளாவிய ரீதியில் நோக்குமிடத்து கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. இச்சங்கம் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் மிகத் திறமையாகச் செயற்பட்டுவருகின்றது.

சங்கங்களில் அரிசி, சீனி விற்பதுதான் என்ற குறிக்கோளில் இருந்து வேறுபட்டு, அந்த சங்கத்தினூடே மக்களுக்குப் பயன்படக்கூடிய பல ஆக்கபூர்வமான கருமங்கள் ஆற்றலாம் என்ற உண்மையை வெளிப்படுத்தி இயங்கிவருவதுதான் கட்டைவேலி, நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்.

தென்னாசியாவில் நிலவும் புத்தகப்பசி நிலையை நன்குணாந்து "கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்" என்ற அமைபபை ஏற்படுத்தி, ஈழத்து நூல்கள் வெளியிடுவதும், ஈழத்தில் இருந்து ஆங்காங்கே வெளிவரும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் நூல்களை கொள்வனவு செய்து விற்பனை செய்வதும் சங்கத்தின் முக்கியபணிகளில் ஒன்றாக இருக்கிறது.

அண்மையில் கூட தென்பகுதியில் உள்ள கொட்ட பொல கூட்டுறவாளர்களின் சந்திப்பு, முதியோர் தினம், தேவி பரமலிங்கத்தின் அணி திரளும் சிறுகதைகள், கவிஞர் சோ.பத்மநாதனின் 'ஆபிரிக்க கவிதைகள்', சு.யேசுராசாவின் 'பனிமழை' போன்ற படைப்புக்களின் விமர்சன அரங்கும் சங்கத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

**செய்திக் கட்டுரை**

திலீபன் நினைவு நாள், மாலதி எழுச்சி நாள் போன்ற எழுச்சி நாள்களை உத்வேகத்தோடு கொண்டாடியது கட்டைவேலி நெல்லயடி ப.நோ.கூ.சங்கமாகும்.

சங்கம் புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் க.பொ.த. (சாதாரண தர)பரீட்சையில் கூடிய விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கும் கல்வித் திணைக்கள கல்விசார் போட்டிகளில் மாகாண, மாவட்ட, தேசியமட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கி வருகின்றது. க.பொ.த. (உயர்தரம்) இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்கட்கு பரிசாக பணமும், புத்தகங்களும் வழங்கப்பட்டன.

உண்மையில் கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கமானது அப்பிரதேசத்தினது மக்களின் சமுக மேம்பாட்டையும், கலை கலாசாரத் தேவைப்பாடுகளையும் நிறைவு செய்யத்தக்க வகையில் பணிகளை மேற்கொண்டு வருவதைப்பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்று கட்டைவேலி - நெல்லியடி கூட்டுறவுச் சங்கத்தினால் 12 விதவைப் பெண்களுக்கு - இலகு கடன் அடிப்படையில் தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன. இத்தகைய சமுதாய முன்னேற்ற முயற்சிகளினூடாக கூட்டுறவு இயக்கத்தை மேலும் வலுப்படுத்த இச்சங்கம் பெரும்பாடுபட்டு வருகின்றது.

**- நல்லதம்பி**

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

விளையாட்டு அரங்கம்

# உயர உயரச் செல்லத்

**2002ஆம் ஆண்டு அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மெய் வல்லுநர் போட்டியில் 21 வயதுக்கு உட்பட்ட பிரிவில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டவரும், தாய்வானில் நடைபெற்ற கனிஷ்ட ஆசியமெய்வல்லுநர் போட்டியில் இலங்கை அணியின் சார்பாக கலந்து கொண்ட ஒரே ஒரு தமிழ் விளையாட்டு வீரனுமான திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவனான ரவீந்திரன் ரதீசன் உடனான நேர்காணல் இது.**

**இவரை நமது ஈழநாடு மனமாரப் பாராட்டுகிறது. மேலும் மேலும் சாதனைகள் புரிய வாழ்த்துகிறது.**

***- நிர்மலன்.***

*கேள்வி:-* உங்கள் விளையாட்டுத் துறை வளர்ச்சி பற்றி?

*பதில்:-* திருகோணமலையை பிறப்பிட மாகக் கொண்ட நான் 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் இங்கு ஏற்பட்ட வன்செயல் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு குடும்பத் தாருடன் இடம்பெயர்ந்து சென்று, ஆரம்பக் கல்வியைக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1988இல் ஆரம்பித்தேன். இரண்டாம் ஆண்டில் கல்வி பயின்றவேளையில், இல்ல விளையாட்டுப் போட்டியில் 7 வயதுக்குட்பட்டோருக்கான 25 மீற்றர் போட்டியில் பங்குகொண்டு எனது விளையாட்டு உலகில் கால் பதித்தேன்.

பின்பு 1990ஆம் ஆண்டு அங்கு ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக மீண்டும் எனது சொந்த ஊரான திருகோணமலைகக்கு வந்து புனித சூசையப்பர் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன்..

தொடர்ந்து 100 மீற்றர் போட்டி, நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் விருப்பத்துடன் பங்குகொண்டேன். பின்னர் கெந்தி மிதித்துப் பாய்தல் போட்டியிலும் எனது கவனத்தைச் செலுத்தி வந்தேன். பின்னர் ச.விஜயநீதனின் தொடர்பால் 1999 இல் கோல் ஊன்றிப் பாய்தலில் கால்பதித்தேன்.

அவ்வருடம் பாடசாலை மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டியில் முதற் தடவையாகப் பங்குகொண்டு 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்ச்சியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டேன்.

2000ஆம் ஆண்டும் மாகாண மட்டப் போட்டியில் கோல் ஊன்றிப் பாய்தலிலும், நீளம் பாய்தல் போட்டியிலும் முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்டேன். இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்திய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 18 வயதுப் பிரிவில் கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டேன். இது நான் எனது விளையாட்டுப் பருவத்தில் தேசிய மட்டத்தில் பெற்றுக்கொண்ட முதலாவது வெற்றியாகும்.

2001ஆம் ஆண்டு இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கம் நடத்திய மெய்வல்லுநர் போட்டியில் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டேன். பின்னர் கனிஷ்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் (20 வயதுப் பிரிவு) எனக்கு மூன்றாம் இடம் கிடைத்தது. இவ்வருடம் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியில் 19 வயதுக்கு உட்பட்ட பிரிவில் நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்டேன். இப்போட்டியில் நிறச் சான்றிதழும் (Colour Cerificate) எனக்குக் கிடைத்தது.

2002ஆம் ஆண்டு மாத்தறை உயன்வத்தை மைதானத்தில் நடைபெற்ற கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் பங்கு கொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டேன். பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டப்போட்டியில் இவ்வருடமும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவானேன். கடந்த ஐப்பசி மாதம் கொழும்பு சுகததாச மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 21 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான போட்டியில் 3.60 மீற்றர் உயரத்தைக் கடந்து முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதோடு தேசிய நிறச் சான்றிதழையும் பெற்றேன். இதன்மூலமாகத் தேசியமட்டப் போட்டி ஒன்றில் தங்கப்பதக்கத்தை முதல் தடவையாக பெற்றுக் கொண்டு, எனது மாவட்டத்திற்கும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடிக்கொடுக்க முடிந்தது.

*கேள்வி:-* முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட உங்களது மனநிலை அப்போது என்னவாக இருந்தது?

*பதில்:-* எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. எனது பாடசாலையின் விளையாட்டு வரலாற்றில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மெய்வல்லுநர் துறையில், பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி ஒன்றில் தங்கப்பதக்கத்தைப் பெற்றிருக்கவில்லை. இவ்வருடம் என் மூலமாக பாடசாலை அந்தப் பெருமையை பெற்றுக்கொண்டது. இதனையிட்டு நானும் பெருமையடைகின்றேன். எனது வெற்றிக்குக் காரணமாக அமைந்த எனது பயிற்றுவிப்பாளர் ச.விஜயநீதனுக்கும் எனது நன்றிகளை இந் நேர்காணல் மூலமாக தெரிவித்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன்.

# தடைகள் ஏதும் இல்லை!

*கேள்வி:-* உமது பாடசாலையைச் சேர்ந்த மாணவனான ரஜன் என்பவர் கடந்த 2000ஆம் ஆண்டு 15 வயது மாணவர்களுக்கான போட்டி ஒன்றில் 200 மீற்றர், 400 மீற்றர் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். அவர் 200 மீற்றர் போட்டியில் புதிய சாதனையையும்



ஏற்படுத்தியதோடு, 400 மீற்றர் போட்டியில் முன்னைய சாதனையைச் சமப்படுத்தியதாக அறிகிறோம். அப்படியாயின் உங்களுக்கு முன்னரும் தங்கப்பதக்கங்கள் பெறப்பட்டுள்ளது அல்லவா?

*பதில்:-* ஆம், ஆனால் இரண்டுக்கும் இடையே வேறுபாடுகள் நிறைய உள்ளன. முதலில் எனது பாடசாலையைச் சேர்ந்த ரஜன் தேசிய ரீதியில் இரண்டு போட்டிகளில் பங்குகொண்டு தங்கப்பதக்கங்களை பெற்றுக் கொண்டமையையிட்டு நானும் மகிழ்ச்சியடைகின்றேன். ரஜன் பங்குபற்றிய போட்டியானது இலங்கைப் பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட போட்டியாகும். இப்போட்டியில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மாத்திரம் பங்குபற்ற முடியும். ஆனால் நான் பங்குகொண்ட போட்டியானது பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி தொடக்கம் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஆகிய போட்டிகளில் பங்குகொண்டு, தெரிவாகித் தேசிய ரீதியிலான போட்டியில் கலந்துகொண்டு பெற்ற வெற்றியாகும்.

*கேள்வி:-* கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியினை நீங்கள் போட்டிக்காகத் தெரிவு செய்தமைக்கு ஏதும் விசேட காரணங்கள் உண்டா?

*பதில்:-* இப்போட்டியில் பங்குகொள்வதற்கு மூன்றுவிதமான திறமைகள் தேவைப்படுகின்றன. அதாவது, ஓடுகின்ற திறமை, பாய்கின்ற திறமை, எறிகின்ற திறமை. எனது பயிற்றுவிப்பாளர் இவ்வாறான திறமைகளை என்னிடம் கண்டதால் இப்போட்டி நிகழ்ச்சியினைத் தெரிவு செய்யுமாறு என்னிடம் கூறிப் பயிற்றுவித்தார்.

*கேள்வி:-* ஆரம்பத்தில் நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் பங்கு கொண்ட நீங்கள் பின்னர் ஏன் அப்போட்டிகளில் நாட்டம் செலுத்தவில்லை?

*பதில்:-* இவ்விரண்டு போட்டிகளிலும் நான் கவனம் செலுத்தியே வந்திருந்தேன். மாகாண மட்டப் போட்டிகளில் நீளம் பாய்தலில் முதலாம் இடத்தை, 2001ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்ட பிரிவில் பெற்றுள்ளேன். ஆனால் தேசிய மட்டத்திலான போட்டியில் என்னால் வெற்றி பெறமுடியவில்லை.

*கேள்வி:-* தடி ஊன்றிப் பாய்தலில், ஊன்றிப் பாயும் கோல் ஒன்றின் விலை சுமார் 45,000 ரூபாய்களாக இருக்கும்போது இவ்வளவு பெரிய தொகையை செலவிட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு உங்களது குடும்பப் பொருளாதாரம் ஈடுகொடுத்ததா?

*பதில்:-* ஆரம்பத்தில் விளையாட்டு அமைச்சு மாவட்டந்தோறும் விளையாட்டுப் பயிற்சி நிலையங்களுக்கு வழங்கிய கோலின் மூலமாகவே பயிற்சிகளை ஆரம்பித்தேன். அக்கோல் பயிற்சிக்குப் போதுமானதாக இருந்தாலும், போட்டிகளில் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக அமைந்திருக்கவில்லை. இருப்பினும் சொந்தமாகக் கோல் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு எனது குடும்பப் பொருளாதாரம் இடம்தரவில்லை. நான் மிகவும் வருமானம் குறைந்த அடிமட்டத்தைச் சேர்ந்தவன். எனது தந்தை சுப்பையா ரவீந்திரன் அச்சகம் ஒன்றில் கடமைபுரிபவர். அவரது ஊதியத்தில் எனக்குக் கோல் ஒன்றினை வாங்கித்தருமாறு என்னால் கேட்க முடியவில்லை. இருப்பினும் எனது பயிற்சியினை நான் தொடர்ந்து வந்தேன்.

பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் என்பன மூலமாக எனக்கு புதிய கோல் ஒன்றினை பெற்றுத்தருவதற்கு எனது பாடசாலை நிர்வாகம் முயற்சி செய்தது.

*கேள்வி:-* உங்களது பயிற்சிக்கு வேறு யாராவது உதவிகள் வழங்கியிருக்கவில்லையா?

*பதில்:-* எனது பயிற்சிக்குத் தேவையான மருத்துவ ரீதியான உதவிகளையும், பயிற்சி உதவிகளையும் வைத்திய கலாநிதி ஜெகத் விமலரட்ண வழங்கியிருந்தார். அவருக்கு நான் பெரிதும் நன்றிக் கடன்பட்டுள்ளேன். அவரோடு மட்டும் நின்று விடாமல் ரொசான் மத்தியூஸ், கிறிஸ்டி தவநேசன் ஆகியோர் விளையாட்டுப்போட்டிகள் திருகோணமலைக்கு வெளியில் நடைபெற்றாலும், என்னுடன் கூட வந்து என்னை உற்சாகப்படுத்தியதோடு போட்டிக்கு வேண்டிய உதவிகளையும் வழங்கியிருந்தனர். சுவிற்சலாந்தில் வசிக்கும் சோனியாவின் பணரீதியான உதவி, அன்ரன் மூலமாக எனக்குக் கிடைத்தது.

*கேள்வி:-* பாடசாலை மட்டத்திலிருந்து உங்களது பயிற்சிக்கு வேண்டிய ஒத்துழைப்புக்கள் எவ்வாறு கிடைத்தன?

*பதில்:-* விளையாட்டு ஆசிரியர்களான ச. தயாபரன், ஜெ.உதயரெட்ணம் ஆகியோர் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியதோடு, பயிற்சிக்கு வேண்டிய உடைகளையும் பாடசாலையில் இருந்து பெற்றுத் தந்தனர்.

*கேள்வி:-* தாய்வானில் கடந்த மாதம் 28ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடைபெற்ற கனிஷ்ட ஆசிய மெய் வல்லுநர் போட்டிக்கு நீங்கள் தெரிவுசெய்யப் படுவதற்கு, நீங்கள் தேசியமட்டப் போட்டியில



**மாகாணமட்டப் போட்டியொன்றில் கலந்து வெற்றி பெற்ற ரதீசன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கத்திடம் இருந்து வெற்றிக் கிண்ணம் பெறுகிறார்.**

பெற்ற முதலிடம் காரணமாக அமைந்ததா? அல்லது அதற்கு முன்னரே தெரிவுசெய்யப்பட்டீர்களா?

*பதில்:-* பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிக்கு முன்னதாகவே நான் தாய்வானில் நடைபெறப் போகும் கனிஷ்ட ஆசிய மெய்வல்லுநர் போட்டிக்கான தெரிவுகளில், தசம நிகழ்ச்சிகளில், முதலாம் இடத்தைப் பெற்றதோடு 5,674 புள்ளிகளையும் பெற்று தெரிவாகியிருந்தேன். இவ்வேளையில் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டேன்.

நான் தேசிய அணியில் இடம் பிடித்தமையால் எனது பயிற்சிக்காக புதிய கோல் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன, ஆளுநர் நிதியில் இருந்து ரூபா 54,000 வழங்கியிருந்தார். அவருக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன்.

*கேள்வி:-* ஆரம்பத்தில் நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் பங்கு கொண்ட நீங்கள், பின்னர் கோலூன்றிப் பாய்தலில் ஆர்வம் செலுத்தி வந்துள்ளீர்கள். தசம நிகழ்ச்சிப் பிரிவினை எவ்வாறு நீங்கள் தெரிவுசெய்து கொண்டீர்கள்?

*பதில்:-* எனது பயிற்றுவிப்பாளரே இதற்குக் காரணம். ஏனெனில் தசம நிகழ்ச்சி என்பது 10 நிகழ்ச்சிகளை உள்ளடக்கியது. அதாவது இரண்டு நாட்களில் 10 போட்டிகளில் பங்குகொள்ள வேண்டும். முதல் நாளில் 100 மீற்றர், நீளம் பாய்தல், குண்டு எறிதல், உயரம் பாய்தல், 400 மீற்றர் நிகழ்ச்சிகள் நடைபெறும். இரண்டாம் நாள் 110 மீற்றர் தடைதாண்டல் ஓட்டம், பரிதி வட்டம் வீசுதல், கோல் ஊன்றிப் பாய்தல், ஈட்டி எறிதல், 1,500 மீற்றர் ஓட்டம் என்பன இடம்பெறும். இதற்கு எல்லா போட்டி நிகழ்ச்சிகளிலும் திறமை பெற்றிருக்க வேண்டும். நான் பெற்ற பயிற்சிகளின் காரணத்தால் இப்போட்டிகளில் என்னால் பங்குகொள்ளமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. அத்துடன் வெளிநாட்டில் நடைபெறும் போட்டி ஒன்றில் கலந்து கொள்ள இதன்மூலம் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதனாலும், இதில் கலந்து கொள்வதற்குத் தீர்மானித்துப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டேன்.

*கேள்வி:-* உங்களுடைய குடும்பத்தில் விளையாட்டுத் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் உள்ளனரா?

*பதில்:-* எனது மூத்த சகோதரன் ரஜீவன் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டுள்ளார். எனது குடும்பத்தினர் தந்த உற்சாகமும், ஒத்துழைப்புமே நான் இந்த நிலையை அடைவதற்குக் காரணமாக அமைந்தது.

*கேள்வி:-* விளையாட்டுத் துறையில் சிறப்பு நிலையை அடைந்த உங்களது எதிர்கால இலட்சியங்கள் என்ன?

*பதில்:-* எதிர்காலத்தில் எனது பாடசாலைக்கும், மாவட்டத்திற்கும், வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கும், எனது நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில், எனது பயிற்றுவிப்பாளரின் ஆசியுடன் குறைந்தது ஆசிய மட்ட போட்டி ஒன்றிலாவது வெற்றி பெறவேண்டும். இதற்கு வேண்டிய வசதிகளும் வாய்ப்புக்களும் எனக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

*கேள்வி:-* உங்களது வெற்றிக்குப் பின்னால் இருந்து உழைத்த உள்ளங்கள் பற்றி சில வார்த்தைகள்

*பதில்:-* எனக்கு உதவியவர்கள் பற்றி ஏற்கனவே கூறியுள்ளேன். அத்தோடு என் மதிப்புக்குரிய அதிபர் ஆர் ஜெரோம் மற்றும் எனது பயிற்சி நாண்பர்கள், எனக்குப் பிரபல்யம் தந்த ஊடகத்துறையினர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்குத் கிடைத்தது போலவே, எனக்குப் பின்னால் வரப்போகும் விளையாட்டு வீரர்களுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

**நேர்காணல்**
**திருமலை.சி.கௌதமன்.**

# டெஸ்ட் திருவிழாக்கள்


மக்காயா என்ரினி

மூன்று டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்து விட்டன. மூன்றும் முடிவுகளையும் கண்டுள்ளன. ஒரே தொடரில் அல்ல. வெவ்வேறு தொடர்களில். ஒன்று ஆஷஸ் தொடர். இரண்டாவது இலங்கை - தென்னாபிரிக்கத் தொடர். மூன்றாவது சிம்பாப்வே - பாகிஸ்தான் தொடர். இலங்கை அணி தன் அணியில் புதிய மாற்றங்களுடனும் தன்னம்பிக்கையுடனும் தென்னாபிரிக்காவிற்குச் சென்றிறங்கியது. சிங்கத்தின் குகையில் புகுந்து சிங்கத்தை வீழ்த்துவோம் என்ற பாணி இருந்தும், பயிற்சி ஆட்டங்களில் பெரிதாக எதையும் இலங்கை அணி பதிவு செய்ததாக இல்லை. முரளி உட்படப் பந்து வீச்சாளர்கள் தம் திறமையைக் காட்ட இயலவில்லை. இந்நிலையில் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்று முடிந்துள்ளது. இதில் இலங்கை அணி மோசமானதொரு தோல்வியைச் சந்தித்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி எடுத்த, வெறும் 192 ஓட்டங்களுக்குப் பதிலாக தென்னாபிரிக்கா குவித்தது 386 ஓட்டங்கள். இரண்டாவது இன்னிங்சில் இலங்கை சகல விக்கட்டுக்களையும் இழந்து எடுக்கக் கூடியதாக இருந்தது 130 ஓட்டங்களை மட்டுமே - முடிவு ஒரு இன்னிங்ஸ் 64 ஓட்டங்களால் இலங்கை அணி படுதோல்வி என்பதாக இருந்தது. இங்கிருந்து புறப்படும்போதே அணித்தெரிவில் அதிருப்தி.

பரீட்சார்த்தர்கள் அணியில் மாற்றங்கள் தேவைதான். ஆனால் யாருடன், எப்போது, எங்கே என்றெல்லாம் இருக்கிறதல்லவா. இலங்கை அணித்தேர்வாளர்கள் சிறிது அவசரப்பட்டுவிட்டார்களோ என்று தோன்றுகிறதல்லவா. இதற்கிடையில் சனத் ஜயசூரிய தமது தோல்விக்குத் துடுபபாட்டத்தின் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டி இருந்தாலும் பந்துவீச்சாளர்கள் மீதும் குற்றம் சுமத்த முயற்சிக்கிறார். தெரிவுமுறையின் அதிருப்தியை இப்போது வெளிக்காட்ட முயற்சிப்பது போலத் தோன்றுகின்றது. ஆனால் தோல்விக்கான கூடுதல் பொறுப்பு சனத் உட்பட துடுப்பாட்ட வீரர்களிடமே காணப்படுவது போலத் தோன்றுகிறது. ஏனெனில் தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடி, பெருந்தொகையான ஓட்டங்களைப் பெற்றிருந்தால் தொடர்ந்து விளையாடும் அணிக்கு அது ஒரு உளவியலில் தாக்கமாக இருந்திருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், முதலில் துடுப்பெடுத்தாடியவர்கள் இலங்கை அணியினரே. இவர்களால் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்களைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை என்பதே உண்மை. ஏனெனில் Followon நிலையில் முதல் இன்னிங்சில் பெற்ற தொகையை விடவும் குறைந்தது 130 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்திருக்கிறார்கள். இந்நிலையில் சனத் பந்துவீச்சாளர்களைக் குறை கூற எந்த நியாயமும் கிடையாது. (சிலவேளை தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்களைத்தான் சனத் குறை கூறுகிறாரோ) இதனையும் விட துடுப்பாட்ட வரிசையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகவே ரஸல் ஆர்னொல்ட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக அனுப்பப்பட்டுள்ளார். இங்கிலாந்திற்கெதிராக ஆர்னொல்ட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகச் சதம் அடித்த துணிவில் இந்த முயற்சி நடைபெற்றிருப்பது போலத் தோன்றுகிறது. ரஸல் முதலாம் இடத்தில் சோபிக்கவும் இல்லை, சனத் ஐந்தாம் இடத்தில் சோபிக்கவும் இலலை. இந்நிலையில் அடுத்த டெஸ்ட்டுக்கு முன்பே அணியில் வேறு பிரச்சனைகள். சனத்தின் வலது கணுக்காலில் ஏற்பட்ட தசைநார் பிரச்சினையால் இரண்டாவது டெஸ்ட்டில் விளையாடுவது சந்தேகம் எனப்படுகிறது. முரளி விளையாடினாலும் பூரண திருப்தியுடன் விளையாடமுடியாத உடல்நிலை. இந்நிலையில் சனத்துக்குப் பதிலாக ஜெகான் முபாரக்கும் அணித் தலைவராக மார்வன் அத்தபத்துவும் செல்வர் போலத் தெரிகின்றது. எனவே பிரிட்டோரியாவில் நடைபெறப்போகும் இரண்டாவது டெஸ்ட் போட்டியும் இலங்கை அணிக்கு வசந்தமாக இருக்கப்போவதில்லை போலவே தோன்றுகின்றது. இன்னொரு பக்கமாக, புதிய வீரர்களை அவசரமாக அறிமுகப்படுத்திய தேர்வாளர்கள், அடுத்த கட்டங்களில் இவர்களை நீக்கி மொட்டிலேயே கருக்கும் செயற்பாட்டைச் செய்வார்களோ தெரியவில்லை. எவ்வாறாயினும் இந்தப் படுதோல்விக்குத் தேர்வாளர்கள், பயிற்றுநர், வீரர்கள் அனைவரும் பொறுப்பேற்பதே நாகரிகமாக இருக்கும்.


இன்ஸமாம் உல் ஹக்

இரண்டாவது டெஸ்ட் போட்டி இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலானதாகும். இங்கிலாந்தின் மீது அவுஸ்திரேலிய ஓய்வுபெற்ற சில வீரர்கள் வைத்திருந்த ஓரளவு நம்பிக்கையையே இங்கிலாந்தினால் காப்பற்ற இயலவில்லை. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட அவுஸ்திரேலியா இரண்டு சதங்கள் உட்பட 492 ஓட்டங்களைக் குவித்தது. இதில் மத்தியூ ஹேடன் 197ஓட்டங்களையும், ரிக்கி பொண்டிங் 123 ஓட்டங்களையும் பெற்றனர். இதனைத் தொடர்ந்து, துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து மிக நன்றாகவே ஆரம்பித்தது. ஏன், முதலாவது இன்னிங்சில் இங்கிலாந்து பெற்ற 325 ஓட்டங்கள் கூட கௌரவமானதுதான். இந்நிலையில் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடையும் நிலையையே எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஸ்ரீவ் வோ வேறு விதமாக யோசித்திருப்பார் போல இருக்கிறது. ஏனென்றால் அவருடைய தளபதிகள் அப்படி. இந்நிலையில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 296 ஓட்டங்களுடன் ஸ்ரீவ் வோ தன் அணியினரைத் திருப்பி அழைத்துக் கொண்டார். ஆனால இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சை இவ்வளவு பரிதாபமாக முடித்துக் கொள்ளும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அவர்கள் பெற்ற மொத்த ஓட்டங்கள் வெறும் 79 மட்டுமே. எதிர்கொண்ட ஓவர்கள் 28.2. மக்ராவினதும், ஷேர்ன் வோனினதும் அற்புதமான பந்துவீச்சு, மத்தியூ ஹெய்டன் இரண்டு இன்னிங்ஸ்களிலும் பெற்ற சதங்கள் (197, 103), இவற்றோடு அவுஸ்திரேலிய அணியின் மின்னல் வேகப் பந்துத் தடுப்பு, மேலாக ஸ்ரீவ் வோவின் தலைமைத்துவம் எல்லாம் ஒன்று சேர்ந்து 384 ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவிற்கு பெரு வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறது. தாங்கள் துடுப்பெடுத்தாடியிருக்கலாம் என்று ஆதங்கப்படுகிறார் நஸார் உசேன். இனிப் பல்வேறு விதமான அபிப்பிராயங்கள் சங்கிலித் தொடராக வெளிவரும். இன்னும் நான்கு டெஸ்ட் போட்டிகள் இருக்கின்றன. ஆஷஸ் சூடுபிடித்துவிட்டது.


மத்தியூ ஹெய்டன்

மூன்றாவது, பாகிஸ்தான் - சிம்பாப்வே டெஸ்ட் போட்டி ஆகும். இநதப் போட்டி பாகிஸ்தான் தாழ்நிலையில் இருந்து தன்னை உயர்த்திக் கொள்ளப் பெரும் உதவியாக இருக்கும். ICC போட்டிகளில் ஆரம்பச் சுற்றிலேயே தோல்வி. அவுஸ்திரேலியாவுடன் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் படுதோல்வி, அணித்தெரிவில் பிரச்சனை, அணித்தலைவர் தெரிவில் சிக்கல், கருத்து வேறுபாடுகள், உயர் அதிகாரிகள் ராஜினாமா, பின் மீளப்பெறல் இப்படியாகச் சோதனை மேல் சோதனை. இந்நிலையில் சிம்பாப்வே அணியை 119 ஓட்டங்களால் பாகிஸ்தான் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி கண்டிருக்கின்றது. போட்டி முடிவினைப் பார்க்கும்போது இரண்டு அணிகளும் சமபலமாகச் சென்றாலும், ஒரு புத்தூக்க அலை பாகிஸ்தான் வீரர்கள் மத்தியில் காணப்பட்டதைக் குறிப பாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அனுபவம் வாய்ந்த புதிய வீரர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இவ்வெற்றியைப் பெற்றுள்ளார்கள். அடுத்த வருட உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு முன் பாகிஸ்தான் அணியிடம் வளர்த்தெடுக்கப் படவேண்டியது இந்தக் கட்டுக்கோப்புத்தான்-

-நிர்மலன்.

# தவறிப் போகும் சந்தோஷங்கள்

மேற்கிந்திய - இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஆட்டம் முடிவுக்கு வந்த விதம் நாகரிக ரசிகர்களைத் தலை குனிய வைத்துள்ளது. ஒரு நாள் ஆட்டம் முடிவுக்கு வந்த விதம் நாகரிகமான கிரிக்கெட் ரசிகர்களை தலைகுனிய வைத்திருக்கும். முதலாவது இரண்டாவது மூன்றாவது ஆட்டங்கள் அனைத்திலும் ஒரு சில ரசிகர்கள் மேற்கிந்திய வீரர்களை நோக்கி கற்களாலும், போத்தல்களாலும் வேறு அகப்பட்ட பொருட்களாலும் எறிந்திருக்கிறார்கள். இப்படியான செயல்கள் ஒரு ஆட்டக்காரனைக் காயப்படுத்தினால் அவரால் சில ஆட்டங்கள் ஆடமுடியாது போகும். அதனால் அணியின் வெற்றி வாய்ப்புக்கள் கூடப் பாதிப்புக்குள்ளாக முடியும். சாதாரணமாகவே அணிகளில காயப்படுவோர் பிரச்சினை பெரும் பிரச்சினை. இந்த விடயத்தில் ஆட்ட மத்தியஸ்தர் மைக் புரொக்டர் மிகவும் கடுமையாகவே நிற்கின்றார். மேலும் மூன்றாவது ஒரு நாள் பேட்டியில் நடைபெற்ற கல் எறிதல் சம்பவத்தின் பின்னர் கார்ல் ஹுப்பர் அணியை மீண்டும் களமிறக்கத் தயாராக இருக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.


வெஸ்பேட்டிரேக்ஸ்

இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இந்திய அணி வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒரு மிகச் சாதகமான நிலையிலேயே, கல் எறியப்பட்டுள்ளது. அப்படியாயின், இதனை ஒரு வித நோயாகத்தான் பார்க்க வேண்டும். இந்திய மைதானங்களில் கூடும் ரசிகர் கூட்டம் மிக அதிகம். எனவே அவர்களின் மகிழ்ச்சியை ஒரு சில புல்லுருவிகள் தடுக்க முனைதல் முறையல்ல. முன்னை நாள் கிரிக்கெட் வீரரும் இன்றைய நாடாளுமன்ற அங்கத்தவருமான கீர்த்தி அஸாட் மற்றும் மனிந்தர்சிங் போன்றவர்கள் மிகக் கடுமையாகவே கருத்துக் கூறியிருக்கிறார்கள். பொலிசார் தம் கடமையைச் சரிவரச் செய்வதில்லை என்று மனிந்தர் சிங் தெரிவித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல விளையாட்டுப் பொறுப்பாளர்கள் எங்கிருந்து தடைகள் ஏற்பட்டதோ அந்தப் பகுதி ரசிகர்கள் எல்லோரையும் அப்படியே அகற்ற முயற்சிக்கிறார்கள். மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட விருந்து நேரம் போதாமை யால் நிறுத்தப்பட்டது. ஒரு சிலரின் தவறுக்கு இது என்ன தீர்ப்பு என்று மற்றவர்கள் பொங்கி எழுந்தால் மைதானம் என்னாவது? ஆனால், ஒருமுறை இந்தியா - பாகிஸ்தான் ஆட்டம் ஒன்று ரசிகர்கள் வெளியேற்றப்பட்ட பின்னர், தடைப்பட்ட இடத்தில் இருந்து நடந்து முடிந்த வரலாறும் இருக்கிறது. சிலவேளை பொலிசாரும் சேர்ந்து வெளியேற்றப்பட்டார்களோ தெரியவில்லை. ஏனெனில் பொலிஸ் சீருடையில் கிரிக்கெட் ஆட்டம் பார்க்க பொலிசார் மைதானத்துக்கு அனுப்பப்படவில்லை.

பொதுவில் இத்தகைய சம்பவங்களை யாரும் வரவேற்பதில்லை. ஐ.சி.சி. இது தொடர்பில் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பது போலக் கருத்துக் கூறியிருக்கிறது. அதாவது இத்தகைய ஆட்ட விரோத சக்திகள், போட்டிகளைக் குழப்பும் மைதானங்களுக்கு, ஆட்டங்கள் ஒதுக்கப்படமாட்டாது என்று அறிவிக்கிறது. இந்தியா மிகப்பெரிய நாடு. பல லட்சக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்களைக் கொண்ட நாடு. இந்நிலையில் தமக்கு ஒரு சர்வதேச ஆட்டத்தை ரசிக்கக் கிடைக்காதா என ஏங்கும் மாநிலங்கள், நகரங்கள் அனேகம். இனிமேல் அவர்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கும் போலத் தெரிகின்றது.

- குணா.

# இனியும் வேண்டவே வேண்டாம்!

தென்னாபிரிக்க நாட்டில் வெள்ளை இனத்தவர்கள், ஆப்ரிகானாஸ், கறுப்பினத்தவர், கலப்பினத்தவர் எனப் பல இனத்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அண்மைக்காலம் வரை, சிறுபான்மை எண்ணிக்கை கொண்ட வெள்ளை இனத்தவரே பெரும்பான்மை எண்ணிக்கை கொண்ட மக்களை சகலதுறைகளிலும் அடக்கியாண்டதும், தற்போது அந்தச் சாபக்கேடான நிறக்கொள்கை நீங்கி எல்லோரும் சமம் என்கின்ற கொள்கையில், நாடு சென்று கொண்டிருப்பதும் எல்லோரும் அறிந்ததே. இன்னொரு வகையில் கறுப்பு இனத்தவர்கள் கையில் ஜனநாயக முறையில் ஆட்சி மாற்றம் பெற்றிருக்கிறது என்பது உண்மை. இந்நிலையில் கிரிக்கெட் ஆட்டங்களுக்கு வீரர்களைத் தெரிவுசெய்யும்போது எல்லா இனத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் கோட்டா முறை ஒன்று பின்பற்றப்பட்டு வந்தது. இல்லாவிடில் தனித்து வெள்ளையர் கொண்ட கிரிக்கெட் அணியே தொடர்ந்தும் களம் இறங்கிக் கொண்டிருக்கும்


ஜக் கலிஸ்

தற்போது இந்த இனரீதியான கோட்டா முறையை கிரிக்கெட் சபை ரத்துச் செய்திருப்பதானது கிரிக்கெட் சபைக்கும் விளையாட்டுத் துறை அமைச்சர் நகொண்டே பல்போர் அவர்களுக்கும் இடையில் பெரும் சச்சரவை உருவாக்கியுள்ளது. குறித்த அளவு கறுப்பின வீரர்கள் பிராந்திய மற்றும் தேசிய அணியில் இடம்பெறுவதை உறுதிப்படுத்தும் கோட்டா முறை உடனடியாக அமுல் நடத்தப்படவேண்டும் என்கிறார் அமைச்சர். ஆனால் தென்னாபிரிக்கக் கிரிக்கெட்டில் இன விகிதாசாரம் இயல்பாகவே - பேதங்கள் ஏதும் பார்க்கப்படாமல் - நடைபெற்றுக் கொண்டிருப்பதால் கோட்டா முறை அவசியமற்றது என்கின்றர் கிரிக்கெட் சபையினர். மேலும் அமைச்சரின் சில கருத்துக்களையும் சபையினர் குறை கூறியிருக்கிறார்கள். அதாவது "ஜக் கலிஸ்" யாராக இருந்தால் எனக்கென்ன. நான் கிரிக்கெட் பார்க்கச் செல்வது என்ரினி, போல் அடம்ஸ் போன்றோரின் விளையாட்டைப் பார்க்கத்தான் என்று கூறுவதாக குறை கூறுகிறார்கள். இவ்விடயத்தில் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் இதில் இரு பகுதியினருமே விடாப்பிடியாக நிற்க முடியாது. ஏனெனில் அடுத்த வருடம் பெப்ரவரியில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் திருவிழா அங்கு நடைபெறவிருக்கிறது. அதற்குத் தடை ஏற்படுத்த எவருமே விரும்பமாட்டார்கள். உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும்தான். இதனால்தான் அமைச்சருக்கும் அரசாங்கத்துக்கும் கிரிக்கெட் சபைக்கும் இடையில் இடைவெளி அதிகம். ஆனால் நாங்கள் கூடிப் பேசி முடிவெடுக்கலாம் என்றும் இந்தப் பிரச்சினை எவ்வகையிலும் உலகக் கிண்ணப் போட்டிகளைப் பாதிக்காது என்றும் கூறுகிறார்.

ஆகவே உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறும்போது தென்னாபிரிக்க ஜனாதிபதியும், அமைச்சர்களும் உணர்வு பூர்வமாகத் தென்னாபிரிக்க அணியுடன் இருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இருந்தாலும் கூட நீண்டகாலம் அரசியல், நிறவேற்றுமைக் கொள்கைகளால் பிரிந்திருந்த இனங்கள் வேகமாக அன்னியோன்னியப்பட்டுக் கொண்டுவரும் வேளையிலும் நியாயபூர்வமான பல்வேறு அபிப்பிராயப் பேதங்கள் முரண்பாடுகளினை உக்கிரப்படுத்த முனைவதும் தவிர்க்க முடியாததுதான். எது எவ்வாறாயினும் தென்னாபிரிக்கா கிரிக்கெட் உலகில் பெரியதொரு சக்தி இந்த சக்தி என்றும் பெரும் சக்தியாகவே இருக்கவேண்டும்.

- நிமலா.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எண்பதத்தான் ஓரா முறையாசெய்யா மன்னவன்*
*தண்பதத்தான் தானே கெடும்*

- திருக்குறள்

# நமது நோக்கு

## இவர்கள் திருந்துவார்களா ?

யாழ்ப்பாணம், 1996 ஆம் ஆண்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் வந்தபோது மிகப்பெரும் மனிதப் படுகொலைகளும், காணாமற்போன சம்பவங்களும் இந்த மண்ணில் நடந்தேறின.

சந்தேகத்தின் பேரில் - கைதான நூற்றுக்கணக்கானோர்- அன்றிலிருந்து இன்றுவரை 'காணாமற் போனவர்களாக' ஆக்கப்பட்டனர்.

இவர்களுக்கு என்ன நடந்தது என்று தொடங்கிய விசாரணைகள் பாதியிலேயே நின்று கொண்டன. காணாமற்போன, தமது உறவுகள்- உயிருடன் இருக்கிறார்களா என்ற தகவல்கூடத் தெரியாத அவல நிலையில் நூற்றுக்கணக்கான பெற்றோர்களும், சகோதரர்களும் இன்னும் கண்ணீரோடு வேதனை மிகுந்த வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

செம்மணியிலும், இன்னும் பிற இடங்களிலும்- மண்ணுள் புதைக்கப்பட்ட மக்களது, எலும்புக் கூடுகள் தோண்டியெடுக்கப்படும் போதெல்லாம்- அந்த நெஞ்சங்கள் படும்பாடு சொல்லிமாளாது. இது எமது உறவாய் இருந்துவிடக்கூடாது என்று, அவர்கள் காணும் வேதனை கரைகடந்து செல்கின்றது.

இத்தகைய கோரமான மனித அவலத்தை அரங்கேற்றிவிட்டு- மக்களின் இதயங்களை வெல்லும் யுத்தத்தை நடத்திய வேடிக்கையும் இந்த யாழ். மண்ணில்தான் நடைபெற்றது.

இந்தக் கொடுமைகளுக்கான சட்டபூர்வமான தீர்ப்பினை எதிர்பார்த்து, எதிர்பார்த்து- அவையெல்லாம் கானல்நீராகி விடுமோ என்ற கட்டத்திற்கு வந்துவிட்ட நிலையில்-சர்வதேச மன்னிப்புச் சபையின் (அம்னெஸ்ரி இன்ரநெஷனல்), தனது அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

யாழ்.குடாநாட்டில்- 1996ஆம் ஆண்டு 600 பொது மக்கள் காணாமற் போனமைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும்-அன்று முக்கிய படைத் தளபதிகளாக இருந்த ரோஹான் தளுவத்தவும், ஜானக பெரோவுமே பொறுப்பு என சர்வதேச மன்னிப புச்சபை குற்றஞ் சாட்டியிருக்கின்றது.

அன்று- யாழ்.குடாநாடு இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டினுள் இருந்தபோது, இத்தகைய மனிதவதைகளும் படுகொலைகளும் நடைபெற்றதை- உயர் தளபதிகளாக இருந்தவர்கள் அறிந்திருக்காதிருக்கவும் முடியாது.

அதிலும்- இத்தகைய பெருந்தொகையானோர் காணாமற்போன சம்பவங்கள்- ஜேர்மனியில் நடந்த நாஸி வதைகளுக்கொத்ததாக நடத்தப்பட்டதை- நேரடியாகவே இந்த அதிகாரிகள் கையாண்டுமிருக்கக் கூடிய வாய்ப்புக்களுள்ளன.

ஏற்கனவே- குறிப்பிட்ட இரண்டு படையதி காரிகளும்- தமிழர்கள் மீதான இனப்படுகொலை முயற்சிகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்ற ரீதியில் இவர்கள் மீதான சந்தேகம் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

இந்த அதிகாரிகளை வழிடத்திய பாதுகாப்பு அமைச்சர், முப்படைகளினதும் பிரதம தளகர்த்தர் என்ற வகையில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதான குற்றப் பொறுப்பும் சாமான்யமானதல்ல.

யாழ்ப்பாண வெற்றியை பாரம்பரிய அரசாட்சி முறையில் கொண்டாடிய ஜனாதிபதிக்கு அந்த வெற்றிக்குப்பின்னான காலத்தில் நிகழ்ந்த அவலங்களும், அவற்றை நிகழ்த்துவதற்கு ஊக்கம் தரும் துணையாக இருந்த இராணுவத்தின் மீதான அவரது விசேட கவனிப்பும், கரிசனையும்- ஒதுக்கித் தள்ளி விடக் கூடியதுமல்ல.

ஆனால்- மன்னிப்புச்சபையின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் எதனை விளைவிக்கக் கூடிய பலம் வாய்ந்தவை என்பதிலும் இத்தகைய குற்றச்சாட்டுக்களால் 'பொறுப்பு வாய்ந்த' இவர்கள் திருந்திவிடுவார்கள் என்றும் முடிவு கட்டிவிடமுடியாது.

தனது அதிகாரப் பலத்தின் மூலம் எதனையும் செய்துவிடலாம் என்ற அழுங்குப் பிடிவாதத்துடன் இருக்கும் ஜனாதிபதியும், இராணுவத்தில் சேவையாற்றியது போக, மிகப்பாதுகாப்பாக அரசின் ராஜதந்திர சேவையில் இணைந்துவிட்ட அந்த உயர் இராணுவ அதிகாரிகளும் இந்த குற்றச்சாட்டுக்களையிட்டுக் கவலைப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.

மன்னிப்புச் சபையின் அறிக்கையானது சர்வதேச ரீதியாக எந்தளவிற்குப் பாரதூரமானதாகக் கொள்ளப்படப் போகின்றது என்பதைவைத்தே, இக் குற்றச்சாட்டின் பெறுதியைக் கண்டுகொள்ளலாம்.

# பங்குச் சந்தையைப் பாதுகாத்த அமெரிக்கத் தமிழ் வர்த்தகர்!

### - ரணில் அரசை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற முயற்சி -

(கொழும்பு நிருபர்)

இலங்கைப் பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடையத் தொடங்கியதை அடுத்து, சந்தை நிலையைச் சீராகப் பேணிக் கொள்வதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான ராஜரட்ணம் பெருந்தொகையான நிதியை வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் வரவு செலவு திட்டத்தால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகக் கூடாதென்பதற்காகவே இந்நிதியுதவி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பலநூற்றுக்கணக்கான மில்லியன் டொலரை இவர் பங்குச் சந்தையில் முதலீடு செய்யுமாறு கென்.பாலேந்திரா மற்றும் மூன்று பிரபல வர்த்தகர்களிடம் இந்த நிதியுதவியை வழங்கியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

# ஆசிய — பசுபிக் பிராந்திய கட்சிகள் தாய்லாந்தில் ஒன்று கூடி மாநாடு

(கொழும்பு)

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 22 நாடுகளின் அரசியல் கட்சித் தலைவர்கள் பங்குகொள்ளும் இரண்டாவது மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு தாய்லாந்தில் நடைபெறவுள்ளது.

பாங்கொக் நகரில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்தும் பல கட்சித் தலைவர்கள் செல்லவுள்ளனர்.

ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயலாளர் மைத்திரி பால சிறிசேன, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன உட்படப் பல் இலங்கையிலிருந்து செல்லவுள்ளனர்.

தமிழ்க் கட்சிகளிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மற்றும் ரவிராஜ் ஆகியோரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரும் இம்மாநாட்டிற்காக பாங்கொங் செல்லவுள்ளனர்.

இம்மாநாட்டினை தாய்லாந்தில் 'ரத்'கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி என்பன ஏற்பாடு செய்திருந்தன. இம்மாநாட்டில் ஆசியப் பசுபிக் நாடுகளுக்கிடையிலான ஜனநாயகம், பொருளாதாரம், அபிவிருத்தி, பாதுகாப்பு போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

## கலை இலக்கியக் கருத்தரங்கு இன்று மூன்றாம் நாள்!

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலைக்கழகம், தமிழ் இலக்கியக் குழு நடாத்தும் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத்தரங்குத் தொடரில் இன்று மூன்றாம் நாள் நிகழ்வில் பல்துறை ஆய்வு கருத்தரங்கு நடை பெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் ஆய்வரங்கில்,

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றி மயிலங் கூடலுள் பி.நடராசாவும், ஈழத்துச் சிறுவர் இலக்கியம் பற்றி கலாநிதி கு.சோமசுந்தரமும்,

ஈழத்து திறனாய்வு வளர்ச்சி பற்றி பேராசிரியை சித்திரலேகா மௌனகுருவும், முஸ்லிம் சமூகத்தைப் பிரதிபலிக்கும் தமிழ் நாடகங்கள் பற்றி பிரபல எழுத்தாளர் முத்து மீரானும்,

ஈழத்து தமிழ் ஆய்வு வளர்ச்சி பற்றி க.இரகுபரனும், ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்களில் மொழி என்னும் விடயம்பற்றி பேராசிரியர் அ.சண்முகதாசும், ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியை நிர்ணயித்த காரணிகள் பற்றி பேராசிரியர் தில்லைநாதனும் உரை நிகழ்த் தவுள்ளார்கள்.

எழுத்தாளர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமை வகிக்கிறார்.

மாலை அமர்வில் எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா தலைமை தாங்குகிறார்.

பி.ப.5மணி தொடக்கம் 8மணிவரை இரவு நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. இந் நிகழ்வுக்கு வீரமணி ஐயர் தலைமை வகிக்கின்றார்.

## வல்லையில் பனந்தோப்பு அமைக்க நடவடிக்கை

(வடமராட்சி)

வல்லைப் பகுதியில் பனந்தோப்பு ஒன்றை அமைப்பதற்கு கரவெட்டி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் முன்வந்துள்ளது.

இதற்காக கரவெட்டி பிரதேச செயலகம் வல்லை மேட்டு நிலப்பரப்பில் 6 ஏக்கர் காணியை வழங்கியுள்ளது. அதனையடுத்து இப்பகுதியில் இவ்வருடம் முதற்கட்டமாக 5 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

சங்க முகாமையாளர் தலைமையிலான பணியாளர்களால் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. (23)

## தென்னந்தோட்ட பாதுகாவலருக்கு மீண்டும் வேலை வழங்கப்படும்!

(வடமராட்சி)

பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை, தென்னந்தோட்டங்களில கடமையாற்றிய பாதுகாவலர் மற்றும் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தவுள்ளது. இது தொடர்பான ஆராய்வுக் கூட்டமொன்று நாளை காலை 10 மணிக்கு பளை - வேம்போடுகேணி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இடப்பெயர்வுக்கு முன் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாவலர்கள், தொழிலாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அபிவிருத்திச் சபைப்பொறுப்பதிகாரி சு.நவரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

(23)

## தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைத்திகதி அறிவிப்பு

(துன்னாலை)

யாழ்.தொழில் நுட்பக்கல்லூரியில் பகல் நேரக் கற்கைநெறி, பகுதி நேரக் கற்கைநெறி ஆகியவற்றை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைத் திகதிகள் - பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இறுதி வருட மாணவர்களுக்கான செயன்முறை பரீட்சைகள் நவம்பர் 25ஆம் திகதியும், எழுத்துப் பரீட்சை டிசம்பர் 16 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன.

இப்பரீட்சையை இறுதி வருட கற்கை நெறியைப் பின்பற்றும் அனைத்து மாணவர்களும் எதிர்கொள்ளவுள்ளனர் என்றும்,

இவர்களுக்கான தேர்வுச் சுட்டெண்களை கல்லூரிக் காரியாலயத்தில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12)

## கோரிக்கைகளை முன்வைத்து கூட்டுறவுப் பணியாளர்கள் மகஜர்!

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கப் பணியாளர்களால் மேன்முறையீட்டுக்காக, தங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு,- வழங்கப்படும் தீர்ப்புக்களை நீண்ட காலமாக கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறைக்கு கொண்டு வராததால் நாம் பாதிக்கப்படுகிறோம்.

எனவே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு துரிதமாக தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்த ஆவன செய்யுமாறு - யாழ். மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தினால் திருமலையிலுள்ள கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 31/99 இலக்கமுடைய சுற்றுநிருபத்திற்கு அமைய, தங்களால் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புகளை வழங்காத சங்கங்கள் அவற்றை உடன் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

இலாபமீட்டும் மாதங்களுக்கு மட்டும் 400/=, 1200/= என்பன இடைக்காலக் கொடுப்பனவாக வழங்கலாம் என்ற நடைமுறைக்கு அமைவாக இலாபமீட்டாத மாதங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை.

ஆனால் நிதியாண்டு முடிவில் சங்கங்கள் இலாப மீட்டுவது தெரியவருகின்றது. தங்களால் அனுப்பப்படும் சுற்று நிருபங்கள் அனைத்தையும் எங்களுக்கும் அனுப்பி உதவவேண்டும். எங்களால் தங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களுக்குப் பதில் அனுப்பி உதவ வேண்டும்.

சம்பள மீளாய்வு செய்யும் போது எமது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த 15 வருடங்களாக பணியாளர் பெயரில் சோர்வாக உள்ள இழப்பீட்டுத் தொகையை பணியாளர் பெயரில் இருந்து நீக்க அந்த அந்த சங்கங்கள் நடவடிக்கை எடுக்காமையினால் - ஊழியர்கள் இளைப்பாறும்பொழுது அவர்களுடைய பணிக்கொடை, பிணை போன்றவற்றினை பெறமுடியாதுள்ளமையை அறியக் கூடியதாக உள்ளது. எனவே இதனைக் கருத்திற் கொண்டு இதற்கான தீர்வினை மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுப் பயிற்சிக் கொடுப்பனவு பற்றிய சுற்று நிருபம் பல சங்கங்களில் வெவ்வேறு விதமாக நடைமுறைப்படுத்துவதாக - எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே இச்சுற்று நிருபத்திற்கான விளக்கத்தினை தந்து உதவ வேண்டும்

25 வருட சேவை முடிவுக்குப் பின் வழங்கப்படும் படியாகிய 750/= , சுற்றறிக்கையில் தெளிவின்மை காரணமாக பல சங்கங்கள் இதனை வழங்காது இழுத்தடிப்புச் செய்கின்றன இதற்கான விளக்கத்தினைத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தங்களுடைய கிளை அலுவலகம் ஒன்றை இங்கு அமைத்து பணியாளர்களின் பிரச்சினைகளைக் கையாளுமாறும் திருமலையிலுள்ள கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் செயலாளருக்கு, யாழ். மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

# தளம்பல் நிலையில் தடுமாறும் தென்னிலங்கை அரசியல் களம்

## இந்தப் பூரிப்பு டிசெம்பர் 05 இற்குப் பின்னரும் தொடருமா?

## தெற்குத் திசையினிலே... - கொழும்பிலிருந்து இந்திரஜித்

ஜனாதிபதியின் எச்சரிக்கை, பிரதம மந்திரியின் பதில் எச்சரிக்கை, நாடாளுமன்றத்தில் வரவு செலவு திட்டம், நிலையியற் கட்டளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் - காங்கிரஸின் முறுகல், என்பவற்றின் மத்தியில்



தெனனிலங்கை அரசியலகளம தளம்பல் நிலையில் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமஅந்தஸ்து நிலையில் இருந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு விட வேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முனைந்து வருகிறது. இதற்காக வெளிநாடுகளின் வலுவான ஆதரவை அது பெற்றிருக்கிறது. இந்த வெளிநாடுகளின் ஆதரவு நிலையானது அரசாங்கத்தை பொறுத்த வரையில் தமது பிரதான அரசியல் எதிரியான ஜனாதிபதியை கட்டுப் படுத்திவைக்க இதுவரை உதவியிருக்கிறது.

மறுபுறம், 20 ஆண்டுகால போர் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள சொத்து இழப்புகள் உட்பட்ட நிதி நெருக்கடியானது, அரசாங்கத்தை பொறுத்த வரையில், வெளிநாடுகளை நம்பியிருக்க வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. இதற்கு மத்தியில் சர்வ அதிகாரங்கள் பொருந்திய ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, அவ்வப்போது அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல்களை விடுத்து வருகிறார். அண்மைக்கால மாக அவர் விடுத்துவரும் அச்சுறுத்தல்களின் வேகம் சற்றுக் கூடியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

18 ஆவது, 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தங்கள் தோல்வியை தழுவியமையைப் போன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரச எதிர்ப்பைத் தமது பக்கம் திருப்ப, ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சி தற்காலிக பின்னடைவைக் கண்ட



தொண்டமான்

மையும், ஆளும் ஐக்கிய தேசிய கட்சியின் அதிருப்தியாளர்களைக் கொண்டு மாற்று அரசாங் கத்திற்கான முன்னெடுப்பில் ஜனாதிபதி திருப்தியான முடிவைக் காணாமையும் இதற்கான காரணங்கள் எனக் கூறலாம்.

ஜனாதிபதி அடிக்கடி உறுதி மொழி ஒன்றை வழங்கி வந்தார். நடைமுறை அரசாங்கம் கலைக்கப் பட மாட்டாது என்பதுதான் அந்த உறுதிமொழி. எனினும் அந்த உறுதி மொழியை ஜனாதிபதி மீறிவிடுவார் என்ற தொனியில், அவருடைய சகோதரரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டாரநாயக்க கருத்துத் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நூலின் மீது நிற்பதாகவும், ஜனாதிபதி டிசெம்பர் 5 ஆம் திகதிக்குப் பின்னர் இன்றைய அரசாங்கத்தை வீழ்த்தப் போகிறார் எனறும் அனுரா பண்டாரநாயக்க, வரவு செலவுத் திட்டம் மீதான 2 ஆம் வாசிப்பு உரையில் தெரிவித்தார்.

அதேநேரம், வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை ஆளும் கட்சியும் எதிர் கட்சியும் தேர்தல் ஒன்றைச் சந்திக் கப்போவதான சூழ்நிலை பற்றியே பெரிதாக பேசிவருகின்றன. தமது அதிகாரங்களைப் பயன்படுத்த தருணம் வந்துவிட்டதாக ஜனாதிபதி அடிக்கடி கூறிவரும் நிலையில், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவும் தேர்தல் ஒன்று பற்றி கருத்துரைத்திருக்கிறார். ஜனாதிபதி, அரசாங்கத்தைக் கலைத்து விட தீர்மானித்திருப்பதாகக் கூறும் அவர், தற்போதைய சந்தர்ப்பத்தில் தேர்தல் நடைபெறுமானால் அதில் ஐக்கிய தேசிய முன்னணி சுமார் 30 ஆசனங்களை மேலதிகமாக வெற்றி கொள்ளும் எனத் தெரிவித்துள்ளார்.


தெனனிலங்கையில் முக்கியமான இரண்டு தரப்புகளும்- தேர்தல் ஒன்றுக்கான ஆயத்தங்களைச் செய்துவரும் அறிகுறிகள் தென்படுகின்றன. ஐக்கிய தேசிய கட்சி இதற்காக பொருளாதாரச் சீரமைப்பை மக்கள்முன் வைத்து வருகிறது. போரினால் சீர்குலைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்ப வெளிநாட்டு உதவிகளை வரவேற்கும் ஐக்கிய தேசிய முன்னணி, அதற்காக உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் பேரில் தனியார் மயமாக்கும் திட்டங்களையும் தீவிரமாக முன்னிலைப்படுத்தி வருகிறது. மறுபுறத்தில் தமது இணைக்கட்சிகளைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளிலும், ஐ.தே. முன்னணி தீவிரமாக இறங்கியுள்ளது. முக்கியமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இருதரப்பினரையும் பிரதம மந்திரியினால் தற்சமயம்வரை திருப்திபடுத்த முடிந்திருக்கிறது. இந்த திருப்தி நிலை அடுத்த தேர்தல் ஒன்றுவரை தாக்குப்பிடிக்கும் என்ற நம்பிக்கை தென்னிலங்கையில் நிலவுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் முன்னேற்றகரமான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வரும் அரசாங்கம், அதற்கு மத்தியில் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் செயற்றிட்டங்களையும் கிரமமாகச் செய்து வருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைப் போன்று அரசாங்கத்தில் இணைந்திருக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி என்பனவும் அடுத்து தேர்தல்வரை விலகாதவகையில் பிரதம் மந்திரியினால் கவரப்பட்டுள்ளன என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள் ளலாம்.

மலையக கட்சிகளான இவற்றில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத்த வரையில், தற்சமயம் அது சில கோரிக்கைகளை அரசாங்கத்திடம் திரைமறைவில் நிறைவேற்றி வருகின்றது. அது மக்கள் நலனை கருத்திற்கொண்டதாக இல்லாத போதிலும், மலையகத்தில் தனக்குச் சவாலாக விளங்கும் மலையக மக்கள் முன்னணியை வீழ்த்தும் திட்டத்தை உள்ளடக்கமாக கொண்டுள்ளது. அண்மையில் ஹட்டன் நகரில் அமைச்சர் சந்திரசேகரனின் அமைச்சிக் கீழ் இருந்துவரும் தொண்டமான் தொழிற்பயிற்சி மையத்தை மூன்றாம்நிலைக் கல்வி அமைச்சின் கீழ் மாற்றியமை இதற்கு சிறந்த உதாரணமாகும். இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை வரவு செலவுத்திட்ட 2 ஆம் வாசிப பின் வாக்கெடுப்பில் பங்கு கொள்வதில்லை என அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் எடுத்திருந்த தீர்மானம் இன்றுவரை வெளிச்சத்துக்கு வராத உண்மையாகும். அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியை பொறுத்தவரையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் வரையில் அது ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்கும். இது தொடர்பில் அந்த முன்னணிக்கும் பிரதம மந்திரிக்கும் இடையில் நல்லிணக்கங்கள் வலுப்பெற்றே காணப்படுகின்றன.

அமைச்சர் சந்திரசேகரன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சார்பானவர் என்ற நிலைப்பாடே அவரை மலையக மக்கள் மத்தியில் நிலை பெறச் செய்தது. அந்த நிலைப்பாடு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வாககுப் பலத்தை பாதிப்பதாக அமைச்சர் ஆறுமுகனின் தரப்பு அச்சம் கொண்டிருக்கிறது. எனினும் இந்த இரண்டு கட்சிகளும் ஆளும்கட்சிகளின் சார்



சந்திரசேகரன்

பாகவே இருந்து வருகின்றமையால், ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்தவரையில், ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸைப் போன்று பெரிதாக யோசிக்கத் தேவையில்லை.

இந்த நிலையில், ஜனாதிபதியின் தரப்பைப பார்த்தால், தனது அதிகாரங்களுக்கு அப்பால் ஜனாதிபதி அடுத்த கட்டத் தேர்தல் நகர்வுக்காக வெளிநாட்டு எதிர்ப்புக் கருத்துக்களை முன வைத்து வருகிறார். குறிப்பாக நோர்வே நாட்டின் ஏற்பாட்டாளர் நிலையை ஜனாதிபதி கண்டித்து வருகிறார். அதேநேரம், லஷ்மன் கதிர்காமர் பிரித்தானியா, மற்றும் அமெரிக்காவுக்கு எதிரான கருத்துகளைக் கூறியிருககிறார். இது நாட்டின் நலனை கருத்திற் கொண்டதாக இருக்கிறதோ? இல்லையோ?, தேர்தல் நலனை எதிர் பார்த்து முன்வைக்கப்படும் கருத்துக்கள் என்பதில் மறுப்பில்லை. ஜனதா விமுக்தி பெரமுன எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியைத் தமது ஆட்சியமைப்புக்காக நம்பியிருக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கைகளுடன் ஒரேயடியாக ஒத்திசைந்து செல்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகிறது. எது எப்படியிருப்பினும் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மக்கள் விடுதலை முன்னணியை நம்ப வேண்டிய நிலைக்கு பொது ஜன ஐக்கிய முன்னணி தள்ளப்பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்டம் மீதான 2ஆம் வாசிப்பில் அரசாங்கம் ஒருவாறாக வெற்றி பெற்றுள்ளது. 3ஆம் வாசிப்பு தற்சமயம் இடம்பெறுகிறது. எனினும் இதில் எதிர்க்கட்சியினர் தமது பாரிய வாய்ப்பு ஒன்றினைத் தவறவிட்டுள்ளனர். 2ம் வாசிப்பின்போது யோசனைகளையும், திருத்தங்களையும் அவை முன்மொழியாமையால், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின்படி, குழு நிலை ஒதுக்கீட்டு விவாதத்தில் எதிர்க்கட்சிகளின் தீவிர பங்கு இழக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடு ஒன்று தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமானால், 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும் என்ற துர்ப்பாக்கிய நிலை எதிர்க்கட்சிகளுக்கு உருவாகியுள்ளது. இதற்கிடையில், 13 ஆம் அரசியலமைப்பின் கீழ் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறைகள் இருப்பதாக பிரதம மந்திரி கூறியிருக்கும் கருத்து, ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுப்பதுபோல அமைந்திருக்கிறது. அதாவது, இனப்பிரச்சினைக்கான தீர்வை நாடாளுமன்ற அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்ற மறைமுக கருத்தை அது வெளிப்படுத்தியுள்ளது. பல்வேறு கருத்துக்களின் மத்தியில் அரசாங்கம் மறறும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் டிசெம்பர் 5 ஆம திகதிக்கு பின்னர் வெளிப்படவிருக்கின்றன. அதே நேரம் டிசெம்பர் 10 ஆம் திகதி வரவு செலவு திட்டத்தின் 3 ஆம வாசிப்பு வாக்கெடுப்பு நடைபெறும் போது என்ன நடக்கும் என்பதுதான் இப்போதைய கேள்வியாக இருக்கிறது.

# பொறுப்பிலிருந்து விலகும் பொறுப்பற்ற தன்மை !

## ஞாயிறு நற்சிந்தனை

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ் உலகத்தை விட்டுச் செல்லும் போது, நற்செய்தியை உலகமெங்கும் அறிவிக்கும்படி திருச்சபைக்கு கட்டளை கொடுத்துவிட்டுச் சென்றார். எனவே இயேசு கிறிஸ்துவின் இக் கோரிக்கைக்கு திருச்சபை செவி சாய்த்துப் பல சவால்களுக்கு மத்தியிலும் முகம் கொடுத்து உலகமெங்கும் தனது பணியாளர்களின் மூலம் நற்செய்தியைச் பறை சாற்றி



வருகின் றது.

இன்று வருடங்கள் இரண்டாயிரம் தாண்டியும் கூட நற்செய்தி யைக் கேள்விப்படாத அனேகர் நம் நாட்டிலும் இருக் கிறார்கள்.

விண்ணுலகிலும் மண் ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன். (மத்.28:18-20)

"தூய ஆவி உங்களிடம் வரும் போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீகள்" (திருத்:1.8) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லவில்லையா? அப்படியானால் நற்செய் தியை மற்றவர்களுக்கு அறிவிப்பதும், நற்செய்தியைக் கேட்டுமனந்தி ரும்பியவர்களுக்கு அவர்கள் கைக்கொள்ள வேண்டி யவற்றைக் கற்றுக் கொடுப்பதும் எமது பொறுப்பு என்பதை நாம மறந்து போகலாகாது.

ஒரு தடவை இயேசு "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிற தென்ன?" எனக் கேட்டார். இது இறைவனுடைய பிள்ளைகள் அவரை ஆணடவர், ஆண்டவர் எனச் சொல்லிக் கொண்டிருப்பதல்ல. அவர் சொல்லும் வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப் படிய வேண்டியவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இன்று நம்மில் அநேகர் அவரை ஆண்டவர் என்றும் கர்த்தர் என்றும் சொல்லுகின்றார்கள். ஆனால் அவர் இட்ட கட்டளையையோ நிறைவேற்றுவதில்லை. ஒரு நாள் இதே கேள்வியை எம் ஒவ்வொருவரிடமும் கேட்பார். அவ்விதம் அவர் கேட்கின்றபோது அவருக்குக் கொடுக்கக்கூடிய மறு உத்தரவு என்ன?

இந்த வகையில் நாம் செய்யும் படியாக இறைவன் சொன்ன காரியங்கள் எவ்வளவு இருக்கின்றது? ஆனால், நாமோ அவற்றையெல்லாம புறந்தள்ளிவிட்டு படமாளிகையிலும், தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னாலும், இருந்து எவ்வளவு நேரத்தை இரவு பகலாகச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எப்பொழுதாவது நாம் சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? ஆண்டவர் ஒரு நாள் எம்மிடத்தில் இதே கேள்வியைக் கேட்கின்றபோது நாம் என்ன பதில் சொல்லப்போகின்றோம? நேரமில்லை என்று சொல்லப் போகின்றோமா? அவ்விதமாக ஒரு நாளும் ஒருவராலும் சொல்ல முடியாது. ஏனெனில் இது எமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு. இந்தப் பொறுப்பை- ஆண்டவராகிய இயேசுவே எம்மிடத்தில் ஒப்படைத்துள்ளார். ஆகவே, எம்முடைய பொறுப்பை நாம் நிறைவேற்றியே ஆக வேண்டும் என்பதை நாம் நினைவிற்கொண்டு செயற்படுவோமாக.

சி.என்.ஹெய்ன்ஸ்

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

அகவை ஒன்றில்



பெயர் : சி.ஜனுசியா
முகவரி : 132, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

அகவை மூன்றில்



பெயர் : ஆ.கிலின்ரன்
முகவரி: 78/11, கடற்கரை வீதி,
நாவாந்துறை.

அகவை ஐந்தில்



பெயர் :ச.பிரணவன்
முகவரி: மகேஸ்வரி அம்பாள் வீதி,
கோப்பாய் தெற்கு.

அகவை ஆறு



பெயர் : வி.பவித்திரா
முகவரி: தென்னிங்கவத்தை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.



பெயர் : கா.கம்சாயினி
முகவரி: 406, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

அகவை ஒன்பதில்



பெயர் : யோ.சிருஞ்சயன்
முகவரி: டென்மார்க்.

அகவை பத்தில்



பெயர் :ர.சங்கீதா
முகவரி: பங்களா லேன்,
மல்லாகம்.

### வாழ்க வளமுடன் !

சிறாரின் பெயர் :..........................................
முகவரி :..........................................
பிறந்த ஆண்டு :..........................................



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..............................
பெற்றார் ஒப்பம்

## நேற்றைய முகமாலைச் சந்திப்பில்...



ஒஸ்ரினை வரவேற்கும் ஒலே புருண்டம்



அரசதரப்புக் குழு



தளபதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கிய புலிகளின் விசேட கொமாண்டோக்கள்



புருண்டம் உரையுடன் சந்திப்பு ஆரம்பமாகின்றது



செய்தியாளர் மத்தியில் ஒஸ்ரின்



சந்திப்பு கொட்டகை - A 9 வீதியில் இருந்து ஒரு தோற்றம்



பேச்சுக்கள் நடுவே ஆலோசனை செய்யும் தீபன், புலித்தேவன்



திட்டவரைபு திருத்தத்தில் புலித்தேவன், ஒஸ்ரின்



திட்டவரைபில் கையெழுத்திடும் தீபன்



திட்டவரைபில் புருண்டம் கையெழுத்திடுகின்றார்.



திட்டவரைபில் ஒப்பமிடும் ஒஸ்ரின்



கண்காணிப்புக்குழு வாகனத்தில் தொலைத் தொடர்பு கருவியுடன் புலித்தேவன்



ஒஸ்ரின் புறப்படுகின்றார்

படங்கள்: லிவிங்ஸ்ரன்



பேச்சுக்கள் முடிவடைந்தன, புறப்படுகை ஆரம்பம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

AVAILABLE COURSES
- MS OFFICE 2002
- VISUAL BASIC 6.0
- ORACLE 8.i
- JAVA 2
- HARDWARE
- C++

Closing Date: 15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposite of J/Hindu Primary School)
(சி-158)

# சிங்கள மக்களை மீளக்குடியேற்ற புலிகளிடம் அனுமதிகோரும் ஒஸ்ரின்

(முகமாலை)

'வடபகுதியிலிருந்து வெளியேறிய சிங்கள மக்களை மீண்டும் வட பகுதியில் குடியமர்த்துவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும்' இவ்வாறு நேற்று முகமாலையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது அரச தரப்பில் தலைமை தாங்கிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

வட பகுதியில் இருபத்தையாயிரம் தொடக்கம் முப்பதாயிரம் வரையான சிங்கள மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். யுத்த நடவடிக்கை காரணமாக இவர்கள் வடக்கிலிருந்து வெளியேறி விட்டனர். இவர்களை மீண்டும் வடக்கில் குடியமர்த்துவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும் என்றும் ஒஸ்ரின் பெர்ணான்டோ கேட்டுக் கொண்டார்.

இதேபோல், வடக்கிலிருந்து வெளியேறிய முஸ்லிம் மக்களும் மீளக் குடியமர்வதற்கும் தமது வழமையான வியாபார நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கும் விடுதலைப்புலிகள் அனுமதிக்க வேண்டும் என்றும்,

இவற்றை விட பாடசாலை மாணவர்களை இராணுவ நோக்கங்களுக்காகவும் அரசியல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காகவும் அரச மற்றும் விடுதலைப் புலிகளாகிய இரு தரப்பினரும் பயன்படுத்தக் கூடாது எனவும் ஒஸ்ரின் பெர்ணான்டோ கோரிக்கைகளை முன்வைத்தார்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் பதிலளிக்கும் போது, முஸ்லிம் மக்களும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து கொள்வதற்கு விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் தடையாக இருக்க மாட்டார்கள் என்றும் பாடசாலை மாணவர்கள் விடயத்தில் வலுக்கட்டாயமாக நாம் எந்த விடயத்தையும் அவர்கள் மேல் திணிக்க மாட்டோம் என்றும் மாணவர்களின் சுய விருப்பத்திற்கு நாம் மதிப்பளிக்கின்றோம், அவர்கள் விரும்பியதை செய்வதற்கு நாம் தடையாக இருக்க மாட்டோம் என்றும் விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (க.லி)



பேச்சுக்களுக்கு நடுவே ஆலோசனையில் தீபன், இளம்பரிதி, புலித்தேவன், இளஞ்செழியன் (படம்: லிவிங்ஸ்ரன்)

## தீர்மானங்கள்...

பொது மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் சம்பந்தமாகவும், இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும், மக்களின் மீள்குடியமர்வு சம்பந்தமாகவும் கடற்தொழிலுக்குத் தடைசெய்யப்பட்ட பகுதிகளிலிருந்து அத்தடையை நீக்குவது சம்பந்தமாகவும் இன்றைய பேச்சுக்களின் போது ஆழமாக ஆராய்ந்தோம்.

அரச பிரநிதிகளுடன் நாம் நடாத்திய பேச்சுக்களின் போது உயர் பாதுகாப்பு வலயத்தில் மாற்றங்களை செய்வது தொடர்பாக நாம் எடுத்துரைத்தோம். எனினும் அரசு இவ்விடயத்தில் எந்த மாற்றத்தையும் செய்வதற்கு தற்போதைக்கு தயாராக இல்லை.

இதேபோல, ஏற்கனவே கடற்தொழிலுக்கு அனுமதிக்கப்பட்ட எட்டு மீன்பிடித்துறைகளைத் தவிர, ஏனைய பகுதிகளில் சுதந்திரமான கடற்தொழில் செய்வதற்கு உடனடியாக அனுமதி வழங்க அரசு தயாராக இல்லை.

மேலும் இடம்யெர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் சென்று மீளக்குடியமர்வதற்கு அரசு அனுமதி வழங்கவில்லை. அத்துடன் தடை செய்யப்பட்டிருக்கின்ற வீதிகளை மக்களின் பாவனைக்குத் திறந்து விடவேண்டும் என்றும் நாம் கோரிக்கை விடுத்தோம். எனினும் இவ்விடயத்தில் கூட உடனடி நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் முகமாலையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய கேணல் தீபன் தெரிவித்தார். (க.லி)

## யாழ்.நகர்...

கையை மேலும் சீராக்குவதற்கான நடவடிக்கை குறித்து அரச- மற்றும் விடுதலைப்புலிகள் தரப்பினர் விரிவாக ஆராய்ந்தனர்.

யாழ்.நகரின் மத்தியில் ஞானம் விடுதி, சுபாஸ் விடுதி ஆகியவற்றிலுள்ள படை நிலைகளை அகற்றி உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்க வேண்டும் என்றும் இப்பகுதிகளில் தடைசெய்யப்பட்டிருக்கின்ற விக்ரோறியா வீதி, மணிக்கூட்டு வீதி ஆகியவற்றை மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் நகரில் இயல்பு சூழலை ஏற்படுத்தலாம் என்றும் விடுதலைப்புலிகள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (க,லி)

# தனியாரின் சொத்துக்களை படையினர் வைத்திருப்பது சட்டவிரோதமானது

(நமது நிருபர்)

தனியார் சொத்துக்களை இராணுவம் வைத்திருப்பது சட்ட விரோதமானது. இதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும் என சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தின் பிரகாரமே எந்தவொரு சொத்தையும் அதிகாரிகள் கையகப்படுத்த முடியும். ஆனால் அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாத சூழலில் தனியாரின் சொத்துக்களை இராணுவம் வைத்திருப்பதற்கு எந்தச் சட்ட அங்கீகாரமும் கிடையாது.

இவ்வாறு இராணுவத்தினர் தனியாரின் சொத்துக்களை சட்ட விரோதமாக வைத்திருப்பதற்கு எதிராக, எவரும் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யமுடியுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவில் ...

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் வெளியேவர முயற்சித்த போது பொது மக்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். பின்னர் பொலிசாரின் உதவியுடன் அவர்கள் தாங்கிகளில் நீரை எடுத்துக் கொண்டு திரும்பியதை அவதானிக்க முடிந்தது. பதற்ற நிலை அதிகரித்து வந்ததை தொடர்ந்து, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு நிலைமை பற்றி அறிவிக்கப்பட்டது. அவர்கள் வந்து சேர்ந்த போதும், ஈ.பி.டி.பியினர் அங்கிருந்து வெளியேறாத நிலை காணப்பட்டது. மீண்டும் மாலை 6 மணியளவில் வருவதாகக் கூறிச்சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பின்னர் அங்கு வரவில்லை.

இதனிடையே நெடுந்தீவு பிரதேச சபையிலிருந்த உழவு இயந்திரம் ஒன்றும், மின் பிறப்பாக்கி ஒன்றும் ஈ.பி.டி.பி. குழுவினரால் அலுவலகத்தை உடைத்து எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தொடர்ந்து இப்பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இச்சம்பவங்களை அடுத்து, இப்பகுதிக்கு வந்த ஊர்காவற்றுறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி, பொது மக்களை மிரட்டியதுடன் காஞ்சிரங்குடாவில் என்ன நடந்தது என்று தெரியுமா? எனக் கேட்டுள்ளார். நேற்றைய சம்பவங்களினால் நெடுந்தீவில் பாடசாலைகள், அலுவலகங்கள எதுவும் இயங்கவில்லை. (112,113)

## ஒஸ்ரினும்...

பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்த போது புலிகளின் கிழக்குப் பகுதித் தளபதியான கேணல் கருணா மட்டக்களப்புக்கு புறப்பட்டுச் சென்ற விடயம் அரசுத்தரப்புக்கு தெரியப்படுத்தப்பட்டது.

கண்காணிப்புக் குழுவுக்கு இப்பயணம் முன்கூட்டியே தெரியப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் பயணத்தின் போது கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் புறப்படும் தளத்துக்குச் செல்லவில்லை. கடற் கொந்தளிப்பு என்பதால் பயணம் சாத்தியமில்லை என்றே தாம் செல்லவில்லை என கண்காணிப்புக் குழு அதிகாரிகள் தெரிவித்ததையடுத்து பரபரப்பு ஏற்பட்டது.

கேணல் கருணாவின் பயணம் தொடர்பாக புலித்தேவனும் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் தனியாக ஆராய்ந்தனர்.

இதையடுத்து புலித்தேவனும் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் தனியான வாகனத்தில் புறப்பட்டுச் சென்றனர். சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் திரும்பி வந்த அவர்கள் கருணா பாதுகாப்பாக மட்டக்களப்புக்குச் சென்று சேர்ந்த விடயத்தைத் தெரியப்படுத்தியதையடுத்தே பரபரப்பு நீங்கியது.

## உயர் பாதுகாப்பு...

செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, வட பிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர, யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவத் தொண்டர் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, யாழ்.மாவட்ட பிரதிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் விதானகே, குறூப் கப்டன் கோலித குணதிலக, பிரிகேடியர் சமரசிங்க, கேணல் ஜெயதிலக, கேணல் ஜெயசேகர மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஜெயரட்ணம் ஆகியோரும் நேற்றைய பேச்சுவார்த்தையின்போது கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகள் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்ட போதிலும், படைத்தரப்பினரின் விட்டுக்கொடுப்பற்ற போக்கின் காரணமாக, நேற்றைய பேச்சுவார்த்தைகளின்போது முடிவுகள் எட்டப்படமுடியாத, தளர்வுற்ற நிலை நிலவியது. இவ் விடயங்களில் - தீர்க்கமான முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் நேற்றைய பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்தன.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், புதிதாக அமைக்கப்பட்ட பாதுகாப்பு நிலைகளையும் சோதனைச் சாவடிகளையும் அகற்றுதல், தடை செய்யப்பட்ட வீதிகளைப் போக்குவரத்திற்குத் திறந்து விடுதல், சுதந்திரமான கடற் தொழிலுக்கு அனுமதித்தல் போன்ற விடயங்களில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இதன் மூலம் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை மேலும் சீராக்குவதற்கு வழி கிடைக்கும் எனவும், நேற்றைய பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் கோரிகைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இவை நிகழ்ச்சி நிரலிலும் குறிப்பிடப்பட்டிருந்தன.

எனினும் உயர்பாதுகாப்பு வலய விடயம் தொடர்பாகவும், மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாகவும் அரச தரப்பு விட்டுக் கொடுப்பற்ற, தளர்வற்ற நிலைப்பாட்டில் இருந்தது.

இவ்விடயங்கள் - மேற்கொண்டு ஆராயப்பட வேண்டியவை என அரசாங்கத் தரப்பினால் கூறப்பட்டதைத் தொடர்ந்து, எதிர்பார்த்தபடி எந்த முடிவுகளையும் - நேற்றைய சந்திப்பில் எட்டமுடியாமல் போனது.

இதேபோல - சந்திப்பு முடிவடைந்த போது - பாதுகாப்பு உப குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்காக சிபாரிசுகள் அடங்கிய திட்ட வரைபு ஒன்றைத் தயாரிப்பதிலும் இரண்டு தரப்பினரும் ஒருவர் மாறி ஒருவராக பல திருத்த யோசனைகளைச் சமர்ப்பித்தனர். இதன் காரணமாக பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னரும், இறுதிவரை இறுக்கமான நிலை நிலவியது.

மாலை கடந்து இருள் சூழும் வரை தொடர்ந்து நடைபெற்ற இப்பேச்சுக்களின் முடிவில் பத்திரிகையாளரைச் சந்தித்த இரு தரப்பினரும் உற்சாகமளிக்கக்கூடிய எந்த முடிவையும் அறிவிக்கவில்லை.

நேற்றைய பேச்சுவார்த்தையின் இறுதியில், பல திருத்தங்களுக்குப் பின்னர் தயாரிக்கப்பட்ட சிபாரிசுகள் அடங்கிய திட்ட வரைபு ஒன்றில் விடுதலைப் புலிகள் தரப்பில் கேணல் தீபனும் அரச தரப்பில் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் கையெழுத்திட்டனர். (க,லி)

நமது ஈழநாடு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை

மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு - 2002

நமது ஈழநாடு மக்கள் வங்கியுடன் இணைந்து நடாத்தும் மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை யா/வேம்படி மகளிர் கல்லூரியில் ஆறு அமர்வுகளாக நடைபெறும்

க.பொ.த. (சா/த) 2002 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் இக்கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெற வருமாறு மாணவ மணிகளை வரவேற்கின்றோம்.

அனுசரணை :-

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்கில் இணைந்து நீங்களும் பயன்பெறுவீர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.